
# Saint Ramalingam




This ebook can be downloaded from www.vallalar.org

# முன்னுரை

## திருச்சிற்றம்பலம்

## தாயுமானவரும் வள்ளலாரும்

## சன்மார்க்க தேசிகன்

## ஊரன் அடிகள்

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே **!**

வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ என்று வள்ளலார் பாடுகிறார்.

**வாழையடி வாழைஎன வந்ததிருக்கூட்ட**
**மரபினில் யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த**

**ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ**
**இது தகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ**

**மாழைமணிப் பொதுநடஞ் செய் வள்ளால்யான் உனக்கு**
**மகனலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ**
**கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்**
**கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள்இப் பொழுதே.**

**திருஅருட்பா - 3803.**

வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர், பட்டினத்தார்,

அருணகிரியார், தாயுமானவர் என்று தொடர்ந்து வரும் இம்மரபைத்தான் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு என்று வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார்.

நாயன்மார்கள் ஆழ்வார்கள் சித்தர்கள் முதலியோரெல்லாம் இம்மரபில் வருபவர்களே. வள்ளலாரின் சமகாலத்தவரான இராமகிருஷ்ணரும் இம்மரபில் வருபவரே. வள்ளலாருக்குப் பின் வந்த அரவிந்தர், ரமணர் போன்றோரையும் இம்மரபிற் சேர்க்கலாம். மகாத்மா காந்தியடிகளையும் மகாகவி பாரதியாரையும் ஒருவகையில் இம்மரபில் சேர்த்துக் கூறலாம். காந்தியடிகள் பாரதியார் இவ்விருவரின் ஆன்மீகம் அவர்களை இவ்வரிசையில் வைத்து எண்ணிப்பார்க்க இடமளிக்கிறது.

வள்ளுவருக்கு முன்னே இவ்வரிசையில் சேர்ப்பதற்குரிய பெருஞானிகள், வடக்கே தோன்றித் தமிழ்நாட்டிலும் பரவி, உலகளாவிய நிலையினரான மகாவீரரையும் புத்தரையும் சேர்க்கலாம். பின்னாளில் கடல் கடந்த நாடுகளில் தோன்றி உலகளாவிய நிலையில் விளங்கும் இயேசுவையும் நபிகளையும் கூட இம்மரபிற் சேர்க்கலாம். உலகில் தோன்றிய ஆன்மிக ஞானிகள் அனைவரும் வாழையடி வாழை, என வரும் திருக்கூட்ட மரபினரே.

ஆயினும் நாம் இங்கு ஒப்பாய்வுக்கென எடுத்துக்கொள்வதில், வள்ளுவர் முதல் வள்ளலார் வரை உள்ளவர்களில் திருவள்ளுவர்-திருமூலர்-சைவ சமயகுரவர் நால்வர்-தாயுமானவர்-என எழுவரை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளோம். வள்ளற்பெருமானது சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளுக்கு ஒத்த, வள்ளற்பெருமானே ஓரிடத்திற் குறிப்பிட்டுப் போற்றியுள்ள மகாவீரர் புத்தர் ஆகிய இருவரையும் வள்ளுவருக்கு முன் வைத்துள்ளோம், வள்ளலாருக்குப் பின் காந்தியடிகளையும் பாரியாரையும் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

எனவே இவ்வாழையடி வாழை ஒப்பாய்வு வரிசை

1. மகாவீரரும் வள்ளலாரும்
2. புத்தரும் வள்ளலாரும்
3. வள்ளுவரும் வள்ளலாரும்
4. திருமூலரும் வள்ளலாரும்
5. சம்பந்தரும் வள்ளலாரும்
6. அப்பரும் வள்ளலாரும்
7. சுந்தரரும் வள்ளலாரும்.
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும்

9. தாயுமானவரும் வள்ளலாரும்

10. வள்ளலாரும் காந்தியடிகளும்

11. வள்ளலாரும் பாரதியாரும்.

எனப் பதினோரு நூல்களாக அமைகிறது

கம்பரும் வள்ளலாரும் என்றொரு நூலை 2003-இல் வெளியிட்டுள்ளோம். சேக்கிழாரும் வள்ளலாரும் ஒரு சமயம் எழுதத் தொடங்கி இன்னும் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது.

இக்காலம் ஆய்வுக்காலம், அதிலும் ஒப்பாய்வுக் காலம் என்பதைக் கூறவேண்டியதில்லை. ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவற்றை ஒப்பிட்டுப்பார்த்துப் பொதுக் கருத்துக்களையும் அனுபவங்களையும் அறிவது பல்வேறு சமரசங்களுக்கு ஏதுவாக இருக்கும்.

**<u>தாயுமானவரும் வள்ளலாரும்</u>**

தாயுமானவரும் வள்ளலாரும் சமரச ஞானிகள். தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுகிறார். வள்ளலார் ஷடாந்த (ஆறந்த) சமரசம் பேசுகிறார். தாயுமானவர் விட்ட இடத்தில் வள்ளலார் தொடங்குவது போல் தோன்றுகிறது. தாயுமானவர் பாடல்களுக்கும் வள்ளலாரின் திருவருட்பாவுக்கும் ஒற்றுமைகள் நிரம்ப உள்ளன. தாயுமானவர் திருமூலரின் மரபில் வரும் மௌன குருவின் சீர். வள்ளலார் திருமூலரைப் பெரிதும் போற்றுகிறார். தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டு என்று வள்ளலார் கூறுகிறார். வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்று வள்ளலாரின் சமகாலத்தவரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார். வாழையடி வாழையென வரும் திருக்கூட்டத்தில் தாயுமானவரை அடுத்து வள்ளலார் வருகிறார். தாயுமானவரையும் வள்ளலாரையும் ஒப்பிட்டு ஆய்ந்து விளக்குவது இந்நூல். மேற்கூறியவற்றைப் பற்றிய ஆய்வுகளெல்லாம் இந்நூலில் இடம்பெறுகின்றன.

அவ்வப்போது எமது பணிகளில் உதவிவரும் **திரு குறிஞ்சி ஞான செல்வநாதன்,** எமது தனிப் பணியாளர் **திரு.இரா.இராஜேந்திரன்** ஆகிய இருவரும் இரவு பகல் பாராது இந்நூல்களின் உருவாக்கத்தின்போது உடனிருந்து பல வகைகளில் உதவினர். நமதன்பர் ஆர்க்காடு நல்லாசிரியர் **புலவர் திரு. ச. சுந்தரேசனார்** அவர்கள் நன்கு மெய்ப்புத் திருத்தி உதவினார். எமது நூல்களை வழக்கமாக அச்சிடும் சிதம்பரம் சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர் **திரு.இரா.கௌதம சங்கர் மற்றுமவர் தம் துணைவியார் திருமதி ஜெயநந்தினி** அவர்களும் குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவினார். இவர்களுக்கு நம் அன்பான பாராட்டும் வாழ்த்துக்களும் உரிய.

Saint Ramalingam

அன்பர்கள் இவ்வரிசை நூல்களை வாங்கிப் பயின்று பயன் பெறுவார்களாக.

வாழ்க! வாழ்க!

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

22/05/2005 **ஊரன் அடிகள்**

## தாயுமானவரும் வள்ளலாரும்

## தாயுமானவர் வரலாறு

### தாயுமானவர் காலம்

தாயுமானவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும், 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி 1608-1662 என்பது கா. சுப்பிரமணியபிள்ளை, தி.பட்டுச்சாமி ஓதுவார் இவ்விருவரின் கருத்து.

தாயுமானவர் திருச்சிராப்பள்ளியில் நாயக்க மன்னர்களின் அரசில் விஜயரங்க சொக்கநாதநாயக்கரின் ஆட்சிக் காலத்திலும் (1706-1732) அதனைத் தொடர்ந்து அரசி மீனாட்சியின் ஆட்சிக்காலத்திலும் (1732-1736) அரண்மனைப் பணியில் சம்பிரதியாக விளங்கியவராதலின் அவருடைய காலம் 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலமே என வரலாற்றாய்வாளர்கள் கூறுவர்.

தாயுமானவரின் பிறப்பு 1707, பரிபூரணம் 1742 என்றொரு குறிப்பும் காணப்பெறுகிறது.

வள்ளலார் பத்தொன்பதாம் நூற்றாண்டினர் (1823-1874) வள்ளலாருக்கு ஒரு நூற்றாண்டு முந்தியவர் தாயுமானவர்.

### தாயுமானவர் பிறப்பும் வாழ்க்கையும்

தாயுமானவர் பிறந்த ஊர் திருமறைக்காடு (வேதாரண்யம்) பெற்றோர் கேடிலியப்பிள்ளை, கஜவல்லி அம்மையார். பரம்பரைச் சுத்த சைவவேளாளர் மரபினரான கேடிலியப்பர் வேதாரண்யம் கோயிலின் நிர்வாகப் பணியாளராக விளங்கினார். கேடிலியப்பரின் மூத்த மகன் சிவசிதம்பரம். கேடிலியப்பரின் தமையனார் வேதாரண்யபிள்ளை மகப்பேறின்றி வருந்தவே தம் மூத்தமகன் சிவசிதம்பரத்தை அவருக்கு வளர்ப்புப் பிள்ளையாக (சுவிகாரம்) கொடுத்தார்.

அதன்பின் கேடிலியப்பரின் இரண்டாவது மகனாராகத் தாயுமானவர் பிறந்தார். திருச்சிராப்பள்ளி மலையின் மீது கோயில் கொண்டுள்ள தாயுமான ஈசரின் பெயரைச் சூட்டப்பெற்றார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யத்திற்குக் கடலாடவும் திருமறைக்காடரை வழிபடவும் வந்த நாயக்க மன்னர் முத்துவீரப்பர், கேடிலியப்பப்பிள்ளையைத் தம்முடன் திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துச் சென்று அரண்மனைப் பணியில் தமக்கு உதவியாகச் சம்பிரதியாக ஆக்கிக்கொண்டார். சம்பிரதி என்பது பெரிய பதவி. அமைச்சர் போன்ற பதவி. தானாதிகாரி தலைமைக் கணக்கர் என்றும் கூறுவர்.

## பொருளடக்கம்


1.தாயுமானவர் வரலாறு.........................................................................4
2.தாயுமானவரின் வேதாந்த சித்தாந்த சமரசம்....................................16
3.சிதம்பர ரகசியம்.....................................................................................25
4.கொல்லா விரதம்...................................................................................30
5.அடியாரும் ஆண்டவனும்.....................................................................34
6.இருவர் பாடல் சில ஒப்புமைகள்.........................................................41
7.தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டு..................................................43
8.வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரா?...........................................44
9.பிற்சேர்க்கை 1.........................................................................................46
10.பிற்சேர்க்கை - 2.....................................................................................49


கேடிலியப்பப் பிள்ளை பலகாலம் சம்பிரதிப் பதவியில் சிறந்து விளங்கினார். நாளடைவில் அவர் காலமானபின் தாயுமானவர் மன்னரின் வற்புறுத்தலுக்கிணங்கச் சம்பிரதி பதவியை ஏற்க வேண்டியவரானார். இளமையிலிருந்தே தோற்றப் பொலிவிலும் கல்வியறிவிலும் ஆற்றலிலும் நற்குண நற்செயல்களிலும் சிறந்து விளங்கிய தாயுமானவருக்கு அரண்மனைப் பணி, சம்பிரதிப் பதவி எளிதாகவே இருந்தது.

ஒருநாள் திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியுள்ள தாயுமானப் பெருமானை வழிபடச் சென்றவர், மலைச்சாரலில் மௌனமடத்தில் எழுந்தருளியிருந்த மௌன

குருவைக் கண்டார். வணங்கி வாழ்த்துப் பெற்றார். அரண்மனைப் பணியில் இருந்தவாறே ஆன்மீக வாழ்விலும் ஈடுபட்டார். மௌனகுருவிடம் உபதேசம் வேண்டியபோது, மணம்புரிந்து சிலகாலம் இல்லறத்தில் இருந்து, மகப்பேறு பெற்றபின் உபதேசம் பெறலாம் என்று மௌன குரு அருளினார்.

உரிய காலத்தில் மட்டுவார்குழலி என்னும் மங்கை நல்லாரை மணந்து, தாயுமானவர் இல்லறத்தில் ஈடுபட்டார். கனகசபாபதி என்றொரு மகன் பிறந்தான். சில ஆண்டுகள் இனிய இல்லறத்திற்குப்பின் மனைவி மட்டுவார் குழலியார் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். மகன் கனகசபாபதியை வேதராண்யத்திற்கு அனுப்பிவிட்டுத் தாயுமானவர் திருச்சிராப்பள்ளியில் தனித்திருந்தார். மன்னர் விஜயரங்க சொக்கநாதநாயக்கரும் இறந்து போனார். அவருக்குப்பின் அரசி மீனாட்சி ஆட்சிக்கு வந்தார். தாயுமானவரும் சம்பிரதிப் பதவியில் தொடர்ந்தார். மௌன குருவிடம் உபதேசம் பெற்றுத் தவவாழ்விலும் மிகுதியாக ஈடுபட்டார். தாயுமானவரின் தவவாழ்வும் அரண்மனைப் பணியும் சிறப்பாக நடைபெற்றன.

## தாயுமானவர் துறவு

அரசி மீனாட்சிக்குத் தாயுமானவரின் மீது காம இச்சை உண்டாயிற்று. தன் சார்பில் ஆட்சியை முழுமையாக ஏற்றுத் தன் பிரதிநிதியாக இருந்து ஆட்சியை நடத்தவும், தன்னையும் அடியாளாக ஏற்று ஆட்கொள்ளவும் வேண்டினாள். தாயுமானவருக்குத் தருமசங்கடமாகப் போயிற்று. இனி இவ்விடம் சற்றும் தாமதிக்கலாகாது, துறவு பூண்டு நாட்டை விட்டே வெளியேறிவிட வேண்டும் என்று எண்ணினார்.

உலகியல் வாழ்வில் அவருக்கிருந்ததெல்லாம் அரண்மனையில் சம்பிரதிப் பதவி ஒன்று தான், அதையும் துறந்து, உலகியல் வாழ்வினின்றும் முற்றும் நீங்கி, தல யாத்திரையாக இராமேஸ்வரத்திற்குப் புறப்பட்டார்.

தவராசயோகி தாயுமானவரின் மீது இச்சை கொண்ட அரசி மீனாட்சி மறைவாக மந்திரவாதிகள் சிலரை ஏவித் தாயுமானவரைத் திரும்ப அழைத்துவர ஏற்பாடு செய்தாள் என்றும் ஒரு வரலாறுண்டு.

இவற்றையெல்லாம் உணர்ந்த தாயுமானவர் கடும் பயணமும் நெடும்பயணமும் ஆக இராமேச்சுரத்துக்குச் சென்று இராமநாதப் பெருமானையும் மலைவளர் காதலியையும் வழிபட்டு, அதன்பின் இராமநாதபுரம் சென்று சேதுபதி மன்னரின் ஆதரவில் தங்கித் தவ வாழ்வில் முற்றிலும் ஈடுபட்டார்.

## தாயுமானவர் முத்தி

சென்ற இடத்திலும் தாயுமானவருக்குச் செல்வாக்கு மிகுந்தது. முன்பு திருச்சிராப்பள்ளியிலிர்ந்த காலத்திலேயே அவர் பாடத் தொடங்கியிருந்தார்.

பாடிப்பரவும் நேரம் போக, ஏனைய நேரங்களிலெல்லாம் சதாகால நிட்டையிலேயே இருந்தார். நெடுநேரம் நிட்டையிலிருப்பது அவருக்கு வழக்கம். சிலசமயம் நாள்கணக்கிலும் நிட்டையில் இருப்பார். அப்படி ஒரு சமயம் நிட்டையில் இருந்தபோது, அவர் மீது பொறாமை கொண்ட அரண்மனைப் புலவர் சிலர் அரசரிடம் சென்று, தாயுமானவர் நிட்டையிலிருந்தவாறே முத்தி பெற்று விட்டதாகக் கூறிவிட்டார். இச்செய்தியைக் கேட்ட சேதுமன்னர் மனம் வருந்தினார். இன்னது செய்வதெனத் தெரியாது திகைத்தார். உரியவாறு முறைப்படி கிரியைகளைச் செய்யுமாறு கூறினார். அழுக்காறு கொண்ட அரண்மனைப் புலவர்கள், தாயுமானவர் நிட்டையிலிருந்து எழுந்து வந்து விடுவார் என்று அஞ்சி, சமாதிக் கிரியைக்கு ஏற்பாடு செய்வதற்குப் பதிலாகத் தகனக்கிரியைக்கு ஏற்பாடு செய்து விட்டனர்.

தாயுமானவரின் தவ உடம்பைத் தீக்கிரையாக்கி விடத் திட்டமிட்டனர். அவ்வாறு நேர வேண்டும் என்று ஊழ், திருவருட் குறிப்பும், இருந்ததுபோலும்.

தகனக் கிரியையின்போது தாயுமானவரின் நிட்டை கலைந்தது. தம் உடல் தீப்பற்றி எரிவதை உணர்ந்தார். இனி இவ்வுடலோடு இருந்து பயனில்லை. நிட்டை நிலையிலேயே இப்பிறவி நிறைவு பெறட்டும் என்றெண்ணி மீண்டும் நிட்டை கூடிவிட்டார். நிட்டானுபூதி நிலையிலேயே முத்திபெற்றார்.

## ஞானியர் வரிசையில் தாயுமானவரின் இடம்

சமயகுரவர் நால்வருக்குப்பின், பெருஞானிகளாக விளங்கியவர்கள் அருணகிரியார் முருக வழிபாட்டினர். அவரது திருப்புகழ் உலகம், ஒரு தனி உலகம். பட்டினத்தார் கடுந்துறவி, துறவுக்கு அடையாளமாகப் பட்டினத்தாரைக் குறிப்பிடுவதே வழக்கம். “பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆருந்துறக்கை அரிதரிது” என்று தாயுமானவரே கூறுகிறார். பட்டினத்தாரும் அவர் பாடல்களும் ஒருதனிவகை. தாயுமானவர் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை. தாயுமானவர் பாடல்களின் எளிமையையும் இனிமையையும் அருணகிரியார் பட்டினத்தார் பாடல்களிற் காண இயலாது. வள்ளலாரின் திருவருட்பாவிற் காணலாம். வள்ளலாரின் பாடல்களுக்கு ஒரு முன்னோடி போன்றது தாயுமானவர் பாடல்கள். தாயுமானவர் விட்ட இடத்தில் வள்ளலார் தொட்டது போற் காணப்பெறுகிறார்.

பட்டினத்தாரும் அவர் பாடல்களும் ஒரு தனிவகை, தாயுமானவர்விட்ட இடத்தில் வள்ளலார் தொட்டது போற் காணப்பெறுகிறார்.

சமயகுரவர் நால்வரும் ஒருவகை.

அவருள்ளும் தேவாரமூவர் ஒருவகை

மாணிக்கவாசகர் தனிவகை

அருணகிரியார், பட்டினத்தார் இருவரும் தனித்தனி வகை

தாயுமானவரும் வள்ளலாரும் ஒருவகை.

நால்வருக்கும் வள்ளலாருக்கும் இடையே தாயுமானவர் நிற்கிறார். தேவார திருவாசகங்கள் திருவருட்பா ஆகிய இவ்விரண்டின் இடையே தாயுமானவர் பாடல் நிற்கிறது.

## தாயுமானவர் பாடல்கள்

மூவர் பாடல்கள் தேவாரம் எனப்பெயர் பெற்றன. மாணிக்கவாசகர் பாடல் திருவாசகம் எனப்பெயர் பெற்றது. திருமூலர் பாடல் திருமந்திரம் எனப்பெயர் பெற்றது. அருணகிரியாரின் பாடல் திருப்புகழ் எனப்பெயர் பெற்றது. பட்டினத்தார் பாடல் பட்டினத்தார் பாடல்திரட்டு எனப் பெயர் பெற்றது. தாயுமானவர் பாடல் தாயுமானவர் பாடல் என்றே பெயர் பெற்றது. வள்ளலார் பாடல் திருவருட்பா எனப் பெயர் பெற்றது.

குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் பாடியவை, குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு, சிவப்பிரகாசப் பிரபந்தத்திரட்டு எனப் பெயர் பெற்றன. அவை தனித்தனிப் பிரபந்தங்கள் ஆதலின் அவற்றின் தொகுதி பிரபந்தத் திரட்டு எனப் பெயர் பெற்றது.

பாடியவரின் பெயரால் இன்னார் பாடல் என்று பெயர் பெறாமல், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ் என ஒரு தனிச்சிறப்புப் பெயரைப் பெறுவது பழைய மரபு. அம்மரபின்படி பட்டினத்தார் தாயுமானவர் பாடலக்ளுக்குத் தனி ஒரு சிறப்புப் பெயர் அமையவில்லை. ஆனால், வள்ளலார் பாடல்களுக்குத் திருஅருட்பா என்று ஒரு தனிச் சிறப்புப் பெயர் அமைந்தது.

தாயுமானவர் பாடியருளிய பாடல்கள், அவர் பெயராலேயே “தாயுமானவர் பாடல்கள்” என வழங்குகின்றன.

தாயுமானவர் பாடல் ஐம்பத்தாறு பகுதிகளாக அமைந்துள்ளது.

| பகுதி எண் தலைப்பு | பாடல்தொகை |
|---|---|
| 1.திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் | 3 |
| 2.பரிபூரணானந்தம் | 10 |
| 3.பொருள்வணக்கம் | 12 |
| 4.சின்மயானந்த குரு | 11 |

| | |
|---|---|
| 5.மௌனகுரு வணக்கம் | 10 |
| 6.கருணாகரக் கடவுள் | 10 |
| 7.சித்தர் கணம் | 10 |
| 8.ஆனந்தமானபரம் | 10 |
| 9.சுகவாரி | 12 |
| 10.எங்கு நிறைகின்ற பொருள் | 11 |
| 11.சச்சிதானந்த சிவம் | 11 |
| 12.தேசோமயானந்தம் | 11 |
| 13.சிற்சுகோதய விலாசம் | 10 |
| 14.ஆகாரபுவனம்-சிதம்பரரகசியம். | 33 |
| 15.தேன்முகம் | 10 |
| 16.பன்மாலை | 10 |
| 17.நினைவொன்று | 9 |
| 18.பொன்னை மாதரை | 78 |
| 19.ஆரணம் | 10 |
| 20.சொல்லற்கரிய | 20 |
| 21.வம்பனேன் | 10 |
| 22.சிவன் செயல் | 10 |
| 23.தன்னையொருவர் | 10 |
| 24.ஆசையெனும் | 40 |
| 25.எனக்கெனச் செயல் | 28 |

26.மண்டலத்தின் 11

27.பாயப்புலி 59

28.உடல் பொய்யுறவு 83

29.ஏசற்றவந்நிலை 10

30.காடுங்கரையும் 3

31.எடுத்ததேகம் 2

32.முகமெலாம் 1

33.திடமுறவே 10

34.தன்னை 1

35.ஆக்குவை 1

36.கற்புறுசிந்தை 7

37.மலைவளர்காதலி 8

38.அகிலாண்டநாயகி 1

39.பெரியநாயகி 1

40.தந்தைதாய் 7

41.பெற்றவட்கே 11

42.கல்லாலின் 30

43.பராபரக்கண்ணி 389

44.பைங்கிளிக்கண்ணி 58

45.எந்நாட்கண்ணி 11

1.தெய்வவணக்கம் 11

2.குருமரபின் வணக்கம் 13

3. அடியார் வணக்கம் 9

4. யாக்கையைப் பழித்தல் 11

5. மாதரைப் பழித்தல் 15

6. தத்துவ முறைமை 27

7. தன்னுண்மை 8

8. அருளியல்பு 18

9. பொருளியல்பு 19

10. ஆனந்த இயல்பு 14

11. அன்பர் நெறி 12

12. அறிஞர் உரை 14

13. நிற்குநிலை 28

14. நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம் 16

46. காண்பேனோ என்கண்ணி 37

47. ஆகாதோ என்கண்ணி 21

48. இல்லையோ என்கண்ணி 6

49. வேண்டாவோ என்கண்ணி 6

50. நல்லறிவே என்கண்ணி 4

51. பலவகைக் கண்ணி 24

52. நின்றநிலை 3

53. பாடுகின்ற பனுவல் 5

54. ஆனந்தக் களிப்பு 30

55. அகவல் 1

56. வண்ணம் 1

Saint Kamalingam

| | |
|---|---|
| 1 முதல் 39 முடிய பாடல்கள் | 587 |
| 40 முதல் 54 முடிய கண்ணிகள் | 863 |
| அகவல்; வண்ணம் | 2 |
| ஆக | 1452 |

தாயுமானவர் பாடல்களில் எளிமையையும் இனிமையும் நிறைந்து விளங்குவதைப் போன்றே அருமையும் பெருமையும் நிறைந்து விளங்குகின்றன. பெரிய பெரிய தத்துவப் பொருள்களையெல்லாம், அனுபவப் பொருள்களையெல்லாம், அரும்பெரும் பொருள்களை யெல்லாம், சிறு சிறு சொற்களில், சிறு சிறு சொற்றொடர்களில் எளிமையாகவும் இனிமையாகவும் தாயுமானவர் சொல்லி விடுகிறார். தாயுமானவர் பாடல்களின் இவ்வருமை பெருமைகள் வள்ளலாரிடம் காணப்பெறுகின்றன.

தாயுமானவர் பாடல்களில் தொட்ட இடமெல்லாம் வள்ளலார் கருத்துகள் தட்டுப்படுகின்றன. தாயுமானவர் விட்ட இடத்தில் வள்ளலார் தொட்டுத் தொடர்வது போல் ஒரு தொடர்பு இழையோடுகிறது.

தாயுமானவர் பாடல்களின் தாக்கம் திருவருட்பாவில் பல இடங்களில் காணப்படுகிறது. பலவகைகளில் வள்ளலார் தாயுமானவரைப் பின்பற்றிப் பாடியுள்ளார். சிந்து, கண்ணி முதலிய பாடல் வகைகளில் வள்ளலாரின் முன்னோடியாகத் தாயுமானவர் திகழ்கிறார். தாயுமானவர் பற்பல கண்ணிகலைப் பாடியுள்ளது போன்றே வள்ளலாரும் பற்பல கண்ணிகளைப் பாடியுள்ளார்.

| **தாயுமானவர் பாடிய கண்ணிகள்** | **வள்ளலார் பாடிய கண்ணிகள்** |
|---|---|
| பராபரக் கண்ணி | பாங்கிமார் கண்ணி |
| பைங்கிளிக் கண்ணி | வெண்ணிலாக் கண்ணி |
| எந்நாட்கண்ணி | முறையீட்டுக் கண்ணி |

காண்பேனோ என்கண்ணி திருவடிக் கண்ணி

ஆகாதோ என்கண்ணி பேரன்புக்கண்ணி

இல்லையோ என்கண்ணி

வேண்டாவோ என்கண்ணி

நல்லறிவே என்கண்ணி

பலவகைக் கண்ணி

“சங்கர சங்கர சம்பு - சிவ, சங்கரசங்கர சம்பு” என்று தாயுமானவர் ஆனந்தக் களிப்புப் பாடுவது போன்றே வள்ளலாரும் சம்போ சங்கர என்று ஆனந்தக் களிப்புப் பாடுகிறார்.

தாயுமானவர் பாடல்கள் எல்லாம் பெரும்பாலும் இறைவனைக் குணஞ்சுட்டுயே பாடப்பெற்றவை. உருவஞ்சுட்டிப் பாடப்பெற்றவை மிகக் குறைவு. தாயுமானவர் பாடல்களின் விளிகளெல்லாம் இறைவனைக் குணம் சுட்டுக்கூறி வேண்டுபவை. எடுத்துக்காட்டிச் சிலவற்றைக் காட்டுவோம்.

**“பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற**
**பரிபூரணா னந்தமே!” -2. பரிபூரணானந்தம்**

பரிபூரணானந்தம் பத்துப் பாடல்களிலும் இதுவே ஈற்றுத் தொடர்; மகுடம், இவ்வாறே பகுதிதோறும் ஈற்றுத் தொடர்கள் இறைவனைக் குணஞ் சுட்டி விளிப்பதாக அமைந்துள்ள பாங்கு எண்ணத் தக்கது.

**“சித்தாந்தமுத்தி முதலே**
**சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே**
**சின்மயானந்த குருவே” -3. சின்மயானந்தகுரு**

**“மந்த்ர குருவே, யோக தந்த்ர குருவே**
**மூலன் மரபில் வரு மௌனகுருவே”**
**-4. மௌனகுரு வணக்கம்**

**“கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு**
**கருணாகரக் கடவுளே”**
**-6. கருணாகரக் கடவுள்**

**“வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற**

**வித்தகச் சித்தர் கணமே” -7 சித்தர் கணம்**

“அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்தமான பரமே” -8. ஆனந்தமான பரம்

“சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே” -9. சுகவாரி

“இகபரம் இரண்டினும் உயிரினுக் குயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே”
-10. எங்குநிறைகின்ற பொருள்

“சர்வபரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே” -11. சச்சிதானந்த சிவம்

“சத்தாகிஎன் சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வமே
தோசோ மயானந்தமே” -12.தேசோமயானந்தம்

“தெரிவதற் கரிய பிரமமே அமல
சிற்சுகோதய விலாசமே” -13. சிற்சுகோதயவிலாசம்

## தாயுமானவர் - வள்ளலார் கருத்தொற்றுமை

தாயுமானவர் எடுத்த எடுப்பிலேயே, முதற் பாடலிலேயே வென்று விடுகிறார். தாயுமானவர் பாடலின் தொடக்கம், முதற்பகுதியின் பெயர் திருவருள் விலாசப் பரசிவ வணக்கம். திருவருட்பா ஆறாந் திருமுறையிலும் முதற்பதிகம் பரசிவ வணக்கம்.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பரம்பொருளின் வணக்கமாகவே முதற்பாடலைப் பாடுகிறார்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வமென்

றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது

எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்ட வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

-தாயுமானவர் பாடல் - 1

சமய கோடிகள் எல்லாம் தம்தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து வழக்கிட நின்றது எது? எங்கணும் பெருவழக்காய்.......உள்ளது எது? அதுவே கருத்துக்கு இசைந்தது, எல்லார் கருத்துக்கும் இசைந்தது, பொதுக் கருத்துக்கு இசைந்தது, என்று அதனைக் கருதி அஞ்சலி செய்கிறார்.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாக விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை, அவரது தனிப்பெருங்கருணையை, விளக்கிக்காட்டவே திருவருட்பிரகாச வள்ளலாராய், வள்ளலார் வந்தார்.

சமயகோடிகள் எல்லாம் தம்தெய்வம் எம்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து வழக்கிட, எங்கணும் பெருவழக்காய் என்னும் தாயுமானவர் பாடலைப் படிக்கும் போது, பேருற்ற உலகிலுறு சமயமத நெறி எலாம் என்னும் வள்ளலார் திருவருட்பா நினைவுக்கு வருகிறது.

பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்
பேய்ப்பிடிப் புற்றபிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கும் இங்கும்

போருற் றிறந்துவீண் போயினார் இன்னும்வீண்
போகாத படிவிரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்தி எல்லாம்

ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன் றிட்டனம் மனத்தில்வே
றெண்ணற்க என்றகுருவே

நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும் ஒளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரைஓங்கு
நீதிநட ராசபதியே -3677

தாயுமானவரும் வள்ளலாரும் சமரச ஞானிகளாகத் திகழ்கிறார்கள். தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுகிறார். சமயங்கடந்த மோன சமரசம் பேசுகிறார். வள்ளலார் ஆறந்த சமரசம் பேசுகிறார். சமயங்கடந்த சமரச சுத்த சன்மார்க்கத்தைப் பேசுகிறார்.

## <u>தாயுமானவரின் வேதாந்த சித்தாந்த சமரசம்</u>

## <u>வள்ளலாரின் ஷடாந்த சமரசம்</u>

தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமய மதங்களும், தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகளும் ஏற்படுத்தப் பெற்றன என்று வள்ளற்பெருமான் கூறுகிறார்.

மதங்களுக்குத் தத்துவக் கொள்கைகள் அடிப்படை. தத்துவக் கொள்கை முடிவுகளை அந்தம் எனக் கூறுவர். ஆறுவகையான முறைகளைக் கண்ட பெரியோர்கள் ஆறந்தங்களாக அவற்றைக் கூறினர்.

தமிழ் நூல்களில் திருமூலர் திருமந்திரம் ஆறந்தங்களை முதன் முதலில் கூறுகிறது.

**வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்**
**நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்**
**ஓதத்தகு மெட் டியோகாந்த அந்தமும்**
**ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே** -2370

என்பது திருமூலர் திருமந்திரம். வள்ளலாரும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் இவ்ஆறு அந்தங்களையும் கூறுகிறார்.

**தூய கலாந்தச் சுகந்தரு வெளிஎனும்**
**ஆயசிற் சபையில் அருட்பெருஞ்ஜோதி**
**ஞானயோ காந்த நடந்திரு வெளிஎனும்**
**ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி**
**விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்**
**அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி**
**பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்**
**அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி**
**சுத்தவே தாந்தத் துரியமேல் வெளிஎனும்**
**அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி**
**சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளிஎனும்**

அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

-4615(33-44)

ஆறாம் திருமுறை நடராச பதிமாலைப் பாடலொன்றிலும் இவ் ஆறு அந்தங்களையும் வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார்.

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்தம்உடனே
நவில்கின்ற சித்தாந்தம் என்னும்ஆ றந்தத்தின்
ஞானமெய்க் கொடிநாட்டியே

மூதாண்ட கோடிக ளொடுசரா சரம்எலாம்
முன்னிப் படைத்தல்முதலாம்
முத்தொழிலும் இருதொழிலும் முன்னின்றியற்றிஐம்
மூர்த்திகளும் ஏவல்கேட்ப

வாதாந்தம் உற்றபல சத்திக ளொடுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்யஇன்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்தும்அரசே

சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே
துரியநடு நின்றசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே 17

ஆறு அந்தங்களின் வரிசைக் கிரமம் யாப்புக்கு ஏற்றவாறு பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் சரியான முறைவைப்பு (வரிசைக்கிரமம்) கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்பதே. “இந்த முறையே அனுட்டிக்க வேணும்” என்று சிவயோக சாரக்கட்டளை என்ற நூல் கூறுகிறது. ஆறந்தங்களையும் தனித்தனியே ஒவ்வொரு பாடலிற் கூறும் புவனை கலைஞானதீபம் என்னும் நூல் இந்த வரிசையிலேயே கூறுகிறது.

வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய இரண்டு அந்தங்களே இப்போது சிறந்து விளங்கக் காண்கிறோம். இவ்விரண்டு அந்தங்களுக்கும் நூல்கள் உள்ளன, குருமார்கள் உள்ளனர். மடங்கள் உள்ளன. ஏனைய நான்கு அந்தங்களும் இவ்விரண்டு அந்தங்களைப் போன்று இன்று சிறந்து விளங்கக் காணோம். பெயரளவிலேயே தெரிகின்றன. அவை என்ன ஆயின என்பது விளங்கவில்லை. இதற்கு வள்ளலார்தான் ஓர் அருமையான விளக்கத்தை அளிக்கிறார்.

ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமாயிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விபாம்; வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி, வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன. என்பது வள்ளற்பெருமான் உபதேசக் குறிப்பு.

இதுகாறும் கூறியவற்றால், அந்தங்கள் ஆறும் என்பதும், வேதாந்த, சித்தாந்தத்தில் ஏனைய நான்கு அந்தங்களும் அடங்கி, இப்போது வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இரண்டுமே வழக்கத்தில் உள்ளன என்பது நன்கறியப் படும்.

வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய இரண்டும் இருவேறு உலகங்களாகவே வழங்கி வருகின்றன. இவற்றை அனுசரிப்பவர்களுக்கிடையே ஒற்றுமையில்லை. வேதாந்திகள் சித்தாந்தத்தை மறுப்பதும் சித்தாந்திகள் வேதாந்தத்தை மறுப்பதும் ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. வேதாந்த சங்கங்களுக்கும் சித்தாந்த சபைகளுக்கும் பகை. வேதாந்த நூல்களில் சித்தாந்த தூஷணம். சித்தாந்த நூல்களில் வேதாந்த தூஷணம். தாயுமானவர் காலத்திற்கு முன்பும் தாயுமானவர் காலத்திலும், தாயுமானவருக்குப் பின் வள்ளலார் காலத்திலும், ஏன்? தற்காலத்திலுங்கூட வேதாந்த சித்தாந்தத் தருக்கங்களும், வாதங்களும் போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டு தானுள்ளன.

இந்நிலையில் தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரச நிலையைப் பேசினார். தாயுமானவர் பாடலில் சித்தர்கணம் என்றொரு பகுதி. பத்துப்பாடல்கள், பாடல்தோறும் ஈற்றடியில் “வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே” என்பது மகுடமாக உள்ளது. வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையைத் தாயுமானவர் ஒரு முறைக்குப் பத்து முறையாகக் கூறியுள்ளார். இரண்டு பாடல்களை மட்டும் கீழே எடுத்துக் காட்டுகிறோம்.

**எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதா**
**னியாதினும் அரிதரிதுகாண்**
**இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ**
**ஏதுவருமோ அறிகிலேன்**

**கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழு தேயருட்**
**ககனவட் டத்தினின்று**
**காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு**
**கலந்துமதி யவசமுறவே**

**பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே**
**பதியா யிருந்ததேகப்**
**பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி**
**பண்ணவிதன் அருளினாலே**

**விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே**
**வேண்டுவே னுமதடிமைநான்**

**வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற**
**வித்தகச் சித்தர்கணமே**

**கல்லாத பேர்களே நல்லவர்களே நல்லவர்கள்**
**கற்றுமறி வில்லாதஎன்**
**கர்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன்**
**கைவல்ய ஞானநீதி**

**நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று**
**நாட்டுவேன் கர்மமொருவன்**
**நாட்டினா லோபழைய ஞானமுக் கியமென்று**
**நவிலுவேன் வடமொழியிலே**

**வல்ல னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே**
**வந்ததா விவகரிப்பேன்**
**வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்**
**வசனங்கள் சிறிதுபுகல்வேன்**

**வெல்லாம லெவரையும் மருட்டிவிட வகைவந்த**
**வித்தையென் முத்திதருமோ**
**வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற**
**வித்தகச் சித்தர்கணமே**

சித்தர்கள் வேதாந்தம் சித்தாந்தம் இவ்விரண்டுக்கும் பொதுநிலையில் உள்ளவர்கள். சித்தர்கணத்தைப் பாராட்டிப் பாடும் இப்பகுதியில் தாயுமானவர் சித்தர்களின் இச்சமரச நிலையைப் போற்றிக் குறிப்பிடுவாராயினார். தாயுமானவர் பாடல்களையெல்லாம் நோக்கின் தாயுமானவரே வேதாந்த சித்தாந்த சமரச ஞானி என்பது தெளிவாகக் தெரிய வரும்.

ஒரு பாடலை எடுத்துக்காட்டுவதே ஈண்டுப்பொது மெனினும் இவ்விரு பாடல்களையும் எடுத்துக் காட்டிய காரணம், இவ்விரண்டு பாடல்களிலும் அரிய பல செய்திகள் உள்ளமையே ஆகும்.

முதற்பாடலில்,

**எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்**
**யாதினும் அரிதரிதுகாண்**
**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ**
**ஏதுவருமோ அறிகிலேன்**

என்று பாடுகின்றார். எத்துணையோ பிறவிகள். எண்ணிறந்த பிறவிகள், எல்லாப் பிறப்புகளிலும் மனிதப் பிறவிதான் அரிய பிறவி. அரிது அரிது என்று ஒரு முறைக்கு இருமுறையாகக் கூறினார். நாம் மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோம். இப்பிறவி

தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ? என்று தாயுமானவரே அஞ்சுகிறார். தாயுமானவரே அஞ்சுகிறார் எனின் நம்போன்றார் நிலை என்ன?

எல்லாப் பிறப்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுடைய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்ட நாம் எல்லோரும் அதனால் அடையத் தக்கதாகிய ஆன்மலாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைதல் வேண்டும். என்று வள்ளற்பெருமானும் உபதேசிக்கிறார். மனிதப் பிறப்பின் அருமையையும், கிடைத்த இம்மனிதப் பிறப்பிலேயே அடையவேண்டிய ஆன்ம லாபத்தைக் காலமுள்ளபோதே அடையவேண்டும் என்பதனையும் தாயுமானவர் வள்ளலார் ஆகிய இருவருமே கூறுகிறார்கள்.

இனி இரண்டாவது பாடலுக்கு வருவோம். கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று பாடலைத் தொடங்குகிறார். நல்லவர்கள் நல்லவர்கள் என்று ஒருமுறைக்கு இருமுறையாகக் கூறுகிறார். உண்மையில் கல்லாதவர்கள் நல்லவர்களா? கல்லாதவர்களை நல்லவர்கள் என்று சொல்லலாமா? சொல்லுகிறார். ஏன் சொல்லுகிறார் என்றால், கற்றும் அறிவில்லாதவர்களைச் சொல்லுகிறார். கற்றதால் மட்டும் நல்லவராகிவிட முடியாது. “கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத்தக” என்ற வள்ளுவர் குறள் மொழியின்படி, கற்றபின் அதற்கேற்ப ஒழுகவேண்டும். கற்றபடி ஒழுகாதிருப்பதைவிடக் கல்லாமையே மேல் என்று சொல்லுகிறார். கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றும் அறிவில்லாத என் கர்மத்தை என் சொல்லுகேன் என்றதைக் கவனிக்க வேண்டும். “கல்வி என்னும் பல்கடற்பிழைத்தும்” என்றும் “கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்” என்றும் மாணிக்கவாசகர் திருவாசகத்திற் கூறியுள்ளதையும் காணவேண்டும்.

இரண்டாவது பாடலில் இதன் பின் தாயுமானவர் கூறுவது மிகச் சுவையானது. என்னிடம் ஒருவர் வந்து கர்மம் முக்கியமென்று சொன்னால், நான் ஞானம் முக்கியம் என்று சொல்லுவேன், அவர் ஞானம் முக்கியம் என்றால் நான் கர்மம் முக்கியம் என்பேன், வட மொழியில் வல்லவர் ஒருவர் வந்தால், நான் திராவிடத்தில் (தமிழில்) இப்படிச் சொல்லியிருக்கிறது என்று கூறுவேன். தமிழறிஞர்கள் வந்து பேசினால், நான் அவர்களிடம் வடமொழியில் உள்ளதைக் கூறி மருட்டுவேன், இவையெல்லாம் கற்ற வித்தைகள், இவ்வித்தைகள், முத்தியைத் தருமோ? என்கிறார். மிகவும் கற்றவர்கள் இவ்வாறெல்லாம் தம் கல்வியறிவுத் திறத்தைக் காட்டி மருட்டுவது அன்றும் வழக்கமாக இருந்திருக்கிறது. இன்றும் வழக்கமாக உள்ளது. தாயுமானவர் அப்படிப்பட்டவர் அல்லர் எனினும், பிறர் குற்றம் தன் மேலேற்றிக் கூறலாகக் கூறுகிறார். இறுதியில் வித்தகச் சித்தர் கணத்தைப் போற்றிப் பாடலை நிறைவு செய்கிறார்.

பராபரக் கண்ணியிலும் அடுத்த அடுத்த கண்ணிகளில் வேதாந்தம் சித்தாந்தம் இரண்டையுமே போற்றிப் புகழ்கிறார்.

**போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசயபோற்றிஎனும்**
**வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே** -18

**முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே**
**சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே** -19

வேதாந்தம் சித்தாந்தம் வேறு வேறு என்னார் என்றொரு கண்ணியிற் கூறுகின்றார்.

**வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்**
**நாதாந்த மோன நலமே பராபரமே** -206

தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசங் கூறுவதைப் போன்றே வள்ளலாரும் திருவருட்பாவிற் பல இடங்களில் வேதாந்த சித்தாந்த சமரசங் கூறுகிறார்.

**“வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ”** -3378

**“சித்தாந்த வேதாந்தப் பொது சிறத்தல் வேண்டும்”** -4087

**“வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்**
**மேவும்பொதுநடம் நான்காணல் வேண்டும்”** -4276

**“சுத்தவேதாந்த வீட்டில் விளங்கியஜோதி”** -4569

**“சுத்த சித்தாந்த வீட்டில் சிறந்தொளிர் ஜோதி”** -4560

இவையெல்லாம் வள்ளலார் திருவருட்பாவிற் கூறுவன. மேலே “வேதாந்த வீட்டில் விளங்கிய ஜோதி” என்று வள்ளலார் சொல்வதை, “வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே” என்றும் தாயுமானவர் பராபரக் கண்ணியுடன் இணைத்துக் காணவேண்டும். “சித்தாந்த வீட்டில் சிறந்தொளிர் ஜோதி” என்று வள்ளலார் கூறுவதை “சித்தாந்த வீதிவருந்தேவே பராபரமே” என்னும் தாயுமானவர் பராபரக் கண்ணியுடன் இணைத்துக் காணவேண்டும்.

## வள்ளலாரின் ஆறந்த சமரசம்

வள்ளலார் தமது நெறிக்குச் சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டார். அதை விளக்கும்போது ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம் என்று விளக்கினார். ஷடாந்தம் - ஆறந்தம். ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கத்தை விளக்கும் வள்ளலார்.

வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த; சமரசம்; இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர ஞாயப்படி கடைதலை பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கமென மருவியது. என்று கூறிகிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நிலைகளையும் ஆறந்த நிலைகளையும், அதற்கு அப்பால் நின்று ஓங்கும் சமரச சுத்த சன்மார்க்கத்தையும்

வள்ளலார் முழுமையாகப் பெற்றார். தமது அனுபவத்தைக் கூறும்போது, இதனையெல்லாம்

**சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்**
**தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்**
**உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால்**
**ஒன்றொன்றா அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்**
**அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்**
**ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால்நின் றோங்கும்**
**பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம்**
**பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி**

**-5806**

என்னும் பாடலிற் கூறுகிறார்.

## சமயங்கடந்த சமரசம்

உலக சமயங்களில் சைவம் ஒன்றே சமரசம் சமயம். சைவத்தின் சமரசத்தை வேறு எச்சமயத்திலும் காண இயலாது. சைவத்தின் சமரசம் என்றே திரு.வி.க. ஒரு நூல் எழுதினார். வேறு சமயங்களின் சமரசம் என்று இப்படி ஒரு நூல் எழுத இயலாது, சைவம் ஒன்றுதான் சமயங்கடந்த நிலையைப் பேசுகிறது. சமயாதீதம் (சமய அதீதம்) என்று ஒரு நிலையைப் பேசுகிறது. சித்தாந்திகள் பலரும் சமயாதீதம் பேசியுள்ளனர். எனினும் தாயுமானவரும் வள்ளலாரும் மிகுதியாகவே சமயதீதம் பேசியுள்ளனர். எவ்வளவோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். எனினும் இடச்சுருக்கங்கருதி ஒவ்வொன்றை மாத்திரம் எடுத்துக் காட்டுகிறோம்.

தாயுமானவர் பாடலில் (சின்மயானந்த குரு என்னும் நான்காம் பகுதியில் நான்காவது பாடல்)

**ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள்**
**அசரசர பேதமான**
**யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை**
**யாதிநூ லையும்வகுத்துச்**

**சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்**
**சமயங் கடந்தமோன**
**சமரசம் வகுத்தநீ யுன்னையான் அணுகவுந்**
**தண்ணருள் வகுக்கவிலையோ**

**பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே**
**பொய்யிலா மெய்யரறிவிற்**
**போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்**

**போக்குவர வற்றபொருளே**

**தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே**
**சித்தாந்த முத்திமுதலே**
**சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே**
**சின்மயா னந்தகுருவே**

என்பது. இப்பாடலில் “சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேற் சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ” என்று சொல்லியுள்ளதைக் காண்க. சைவம் முதலாகிய அளவற்ற பல சமயங்களையும் வகுத்த இறைவன் (பரம்பொருள் சமயங்களுக்குமேல், சமயங்கடந்த ஒரு மோன சமரசத்தையும் வகுத்திருக்கிறான். ஆனால் உலக மக்கள் அனைவரும் சமய மதநெறிகளிலேயே உழன்று கொண்டுள்ளனர். சமயங்கடந்த சமரசநிலைக்கு, சமயாதீத நிலைக்குச் செல்வதில்லை. மிகமிகச் சிலரே சமயாதீத நிலையில் நிற்கின்றனர். அப்படிப் பட்டவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் மிகுதி, சைவத்தில் தான் மிகுதி. தாயுமானவரும் வள்ளலாரும் சமயாதீதர்கள். வள்ளலாரின் சம காலத்தவரான இராமகிருஷ்ணரும் சமய சமரச நெறியைக் கடைப்பிடித்துள்ளார். சமய சமரசத்திற்கு இந்தியாவே களமாகத் திகழ்கிறது. அதிலும் தமிழ்நாடே, சிறந்த களமாகத் திகழ்கிறது.

வள்ளலார் தம்முடைய சமரச சுத்த சன்மார்க்கத்தைச் சமய மதங்களுக்கு அப்பாற்பட்டது என்று பலகாறும் கூறுகிறார்.

வடலூரில் ஜோதி வழிபாட்டுக்காகத் தாம் அமைத்தருளிய சத்திய ஞான சபையை “சமயமும் மதமும் கடந்ததோர் ஞானசபை” என்கிறார்.

**சமயமும் மதமும் கடந்ததோர் ஞான**
**சபைநடம் புரிகின்ற தனியைத்**
**தமைஅறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்வைச்**
**சத்துவ நித்தசற் குருவை**

**அமையஎன் மனத்தைத் திருத்திநல் அருளார்**
**அமுதளித் தமர்ந்தஅற் புதத்தை**
**நிமலநிற் குணத்தைச் சிற்குண கார**
**நீதியைக் கண்டுகொண் டேனே** -3972

<u>கடலும் நதியும்</u>

சமயங்களெல்லாம் ஆறுகள் போன்றவை. பரம்பொருள், ஆறுகள் அனைத்தும் வந்து கலக்கும் சங்கமிக்கும் கடல் போன்றது. சமய நதிகளெல்லாம் கடவுட் கடலில் கலக்கின்றன. சமயங்களெல்லாம் நதிகள் (ஆறுகள்), கடவுள், சமயங்களெல்லாம் சங்கமிக்கும் கடல் என்பதைத் தாயுமானவர், வள்ளலார் ஆகிய இருவருமே கூறுகின்றார்.

**வேறு படுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்**
**விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால்**
**மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன**
**வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா.**

என்பது தாயுமானவர் பாடல் (கல்லாலின் - 25). மோனவாரிதி கடல். ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம் என்றும் பகுதியிலும்

**ஆறனைத்தும் புகுங்கடல்போல் சமயகோடி**
**அத்தனையுந் தொடர்ந்து புகும் ஆதிநட்பே -3**

என்று பாடுகிறார். மலைவளர் காதலி முதற்பாடலில்

**நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்ட பர**
**ஞான ஆனந்த ஒளியே -1**

என்று பாடுகிறார்.

வள்ளலாரும், இதே நதி கடல் உதாரணங்களைக் கூறிச் சமய சமரசம் பாடுகிறார். "பொங்கும் பல சமயமெனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே" என்று இறைவனைப் பாடுகிறார்.

**பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்**
**புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்**
**கங்குகரை காணாத கடலே எங்கும்**
**கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்**
**தங்கநிழல் பரப்பியமயல் சோடை யெல்லாந்**
**தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்**
**செங்குமுத மலரவரு மதியே எல்லாம்**
**செய்யவல்ல கடவுளே தேவ தேவே. -2118**

என்பது வள்ளலார் அருளிய மகாதேவ மாலையில் நாற்பத்தெட்டாம் பாடல். வேறுபடுஞ் சமயமெல்லாம் என்னும் தாயுமானவர் பாடலையும் பொங்கும் பல சமயமெனும் வள்ளலார் பாடலையும் ஒன்றாக வைத்துச் சிந்திக்க வேண்டும்.

Saint Kamalingam

## சிதம்பர ரகசியம்

### தாயுமானவர் வள்ளலார் அனுபவங்கள்

தாயுமானவர் பாடலில் "ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம்" என்றொரு பகுதி உள்ளது. முப்பத்து மூன்று பாடல்கள். அந்தாதித் தொடையாக அமைந்தவை. முதற் பாடல் ஆகாரபுவனம் என்று தொடங்குவதால் இப்பகுதி ஆகாரபுவனம் எனப் பெயர் பெற்றது. முதற்குறிப்பாற் பெற்ற பெயர். ஆகாரபுவனம் என்ற தலைப்புக்குச் சிதம்பர ரகசியம் என்றொரு துணைத் தலைப்பும் கொடுக்கப் பெற்றுள்ளது. சிதம்பர ரகசியம் என்ற இத்துணைத் தலைப்பு இப்பகுதிப் பாடல்களிற் கூறப்பெரும் பொருளால் அமைந்தது. சிதம்பர ரகசியம் இப்பகுதியில் கூறப்பெறுவதால் சிதம்பர ரகசியம் எனப் பெயர் பெற்றது.

ஆகார புவனம் சிதம்பர ரகசியம் என்ற பகுதியிலிருந்து மூன்று பாடல்களை மட்டுமே இங்கெடுத்துக் காட்டுகிறோம்.

**இயல்புஎன்றும் திரியாமல் இயமம் ஆதி**
**எண்குணமும் காட்டி, அன்பால் இன்பம் ஆகிப்,**
**பயன்அருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்,**
**பண்புஉறவும் சௌபான பக்ஷம் காட்டி,**
**மயல்அறு மந்த் ரசிக்ஷை ஜோதி டாதி**
**மற்றுஅங்க நூல் வணங்க, மௌன மோலி**
**அயர்வுஅறச் சென் னியில் வைத்து, ராஜாங் கத்தில்**
**அமர்ந்ததுவை திகசைவம் அழகுஇது அந்தோ!**

"ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம்" என்று இப்பாடலிற் கூறுகிறார். உலக சமயங்களுக்கெல்லாம் தாய்ச் சமயம் சைவம். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை ஈன்றெடுத்த தாய்ச் சமயம் சைவம். அது ராஜாங்கத்தில் அமர்ந்தது என்கிறார். தாயுமானவர் ராஜாங்கத்தில் அமர்ந்தது என்கிறார். தாயுமானவர் ராஜாங்கத்தில் அமர்ந்து அதிகாரப் பணியாற்றியவர். ராஜாங்கப் பெருமை அவருக்குத் தெரியும். மதங்களுக்கெல்லாம் அரசு சைவம். சமய உலகில் ராஜாங்கத்தில் அமர்ந்து அரசோச்சுவது சைவம்.

**அந்தோஈது அதிசயம் இச் சமயம் போல்இன்று,**
**அறிஞர்எல்லாம் நடு அறிய அணிமா ஆதி**
**வந்துஆடித் திரிபவர்க்கும்; பேசா மோனம்**
**வைத்திருந்த மாதவர்க்கும்; மற்றும் மற்றும்**
**இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்;**
**இதுஅன்றித் தாயகம்வேறு இல்லை இல்லை;**
**சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்**
**தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்.**

அந்தோ! ஈது அதிசயம், இச்சமயம் போல் இன்று எல்லார்க்கும் இது அன்றித் தாயகம் வேறு இல்லை, இல்லை என்கிறார். இது அன்றித் தாயகம் வேறு இல்லை என்பதை ஊன்றிக் காணவேண்டும். இல்லை என்று ஒருமுறை சொன்னாற் போதாதென்று, இல்லை இல்லை என்று இருமுறை கூறுகிறார். எல்லாச் சமயங்களுக்கும் தாய்ச்சமயமான, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த சமயமான இதுவே (சைவமே) எல்லார்க்கும் இன்று தாயகம். இதுவன்றி வேறு இல்லை இல்லை. இந்நெறியே தான் சன்மார்க்கம்!

இங்கு சன்மார்க்கம் என்பது சைவம் கூறும் நான்கு மார்க்கங்களில் நான்காவதான சன்மார்க்கத்தை. தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என சைவமார்க்கங்கள் நான்கு. தாசமார்க்கமாகிய சரியையை விளக்க வந்தவர் அப்பர். சற்புத்திர மார்க்கமாகிய கிரியையை விளக்க வந்தவர் சம்பந்தர். சகமார்க்கமாகிய யோகத்தை விளக்க வந்தவர் சுந்தரர். சன்மார்க்க மாகிய ஞானத்தை விளக்க வந்தவர் மாணிக்கவாசகர். இந்நான்கு மார்க்கங்களையும் அரும்பு, மலர், காய், கனிகளுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார் தாயுமானவர்.

**விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்**
**அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே**

என்பது தாயுமானவரின் பராபரக்கண்ணியில் 157-ஆவது கண்ணி.

மாணிக்கவாசகர் விளக்கிய சைவ சன்மார்க்கத்தைச் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்க வந்தவர் வள்ளலார். மாணிக்கவாசகருக்குப் பின்னே, வள்ளலாருக்கு முன்னே, முன்னோடியாக வந்தவர் தாயுமானவர். சைவ சமய ஞானமார்க்கமே சன்மார்க்கம் "இந்நெறியே தான் சன்மார்க்கம் என்று" சமய சன்மார்க்கத்தைக் கூறுகிறார்.

அடுத்து சிதம்பர ரகசியத்தைக் கூறும் பாடலுக்கு வருவோம்.

**சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு**
**சமய சங்கே தப்பொருளும் தான்ஒன்று ஆகப்**
**பன்மார்க்க நெறியினிலும் கண்டது இல்லை;**
**பகர்வுஅரிய தில்லைமன்றுள் பார்த்த போதுஅங்கு**
**என்மார்க்கம் இருக்குது எல்லாம் வெளியே என்ன**
**எச்சமயத் தவர்களும் வந்து இறைஞ்சா நிற்பர்,**
**கல்மார்க்க நெஞ்சம்உள எனக்கும் தானே**
**கண்டவுடன் ஆனந்தம் காண்டல் ஆகும்**

இப்பாடலை நன்கு ஒருமுறைக்கு இருமுறை நின்று நிதானித்து நிறுத்தி நிறுத்திப் பொருளுணர்ந்து படிக்க வேண்டும்.

சன்மார்க்க ஞானத்தின் பொருளும் சமய சங்கேதப் பொருளும் ஒன்றாக, வேறு பல மார்க்க நெறிகளிலும் கண்டது இல்லை. இங்கே சைவம் கூறும் சன்மார்க்கத்தில்

தான் காண்கிறார் தாயுமானவர். தில்லைச் சிதம்பரத்தைப் பகர்வரிய தில்லை மன்று என்கிறார். பகர்வரிய தில்லை மன்றில் பார்க்கின்றபோது அங்கு என்மார்க்கம் இருக்கிறது எல்லாம் வெட்ட வெளியே என்று எச்சமயத்தவர்களும் வந்து இறைஞ்சா நிற்கிறார்கள் என்கிறார். சிதம்பரத்திற்குப் பொது என்று ஒரு பெயர். அது எல்லாச் சமயங்களுக்கும் பொது.

சைவ வைணவப் பொது என்பதை வெளிப்படையாகக் காணலாம். ஊனக் கண்ணாலும் காணலாம். நடராசப் பெருமானோடு கோவிந்தராசப் பெருமாளும் எழுந்தருளியுள்ளார். சமயகுரவர்களோடு ஆழ்வார்களும் பாடியுள்ளனர். துலமாக நோக்கும்போது சைவ வைணவ சமரசம் தெரிகிறது. சூக்குமமாக நோக்கினால் சர்வ சமய சமரசம் தெரியும். ஞானக் கண்ணால் காணலாம்.

சிதம்பரத்தில் உருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, அருவ வழிபடு என முத்திர வழிபாடும் உண்டு. சிதம்பரம் ஆகாயத்தலம், வான்தலம், விண்தலம், இக்காலம் விண்வெளிக் காலம். தூல விண்வெளிக் காலம். தூல விண்வெளியில் இன்று கண்டும் காணாதும் உள்ள அதிசயங்களெல்லாம், அற்புதங்களெல்லாம் சூக்கும விண்வெளியாகிய தில்லைச் சிதம்பரத்தில், சிற்றம்பலத்தில் அடங்கியுள்ளன. எல்லாச் சமயங்களும் முடிபுகளும் அனுபவங்களும் சிதம்பரத்தில், அதன் இரகசியத்தில் அடங்கியுள்ளன.

எல்லாச் சமய முடிவுகளும் திருச்சிற்றம்பலத்திலே இருக்கின்றன என்று வள்ளற்பெருமான் கூறுகிறார்.

**இச்சைஒன்றும் இல்லாதே இருந்தஎனக் கிங்கே**
**இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித்**
**தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத்**
**தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே**
**எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம் பலத்தே**
**இருந்தஎன எனக்கருளி இசைவித்த இறையே**
**முச்சகமும் புகழமணி மன்றிடத்தே நடக்கும்**
**முதல்அரசே என்னுடைய மொழியும் அணிந்தருளே**

எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த (இருக்கின்றன) என்று இறைவனே வள்ளற் பெருமானுக்குத் தெரிவித்து அருளினான் என்பதை வள்ளற்பெருமான் இப்பாடலில் நமக்குத் தெரிவித் தருளினார். “எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலத்தே இருந்த எனக்கருளி இசைவித்த இறையே” என்றதை நோக்குக!

ஐந்து மாதக் குழந்தைப் பருவத்திலேயே, தாயாரின் கைப்பிள்ளையாக இருந்தபோதே, வள்ளற்பெருமான் சிதம்பர ரகசியத்தை வெட்ட வெளியாகக் காட்டப் பெற்றார். அதனைக் குறிக்கும் திருவருட்பாப் பாடல் பின்வருமாறு:

**தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்**
**தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது**
**வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்**
**வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே**
**காய்வகைஇல் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே**
**கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே**
**தூய்வகையோர் போற்றமணி மன்றில்நடம் புரியும்**
**சோதிநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே**
**-4133**

தாய் முதலாரோடு என்றதால், தாயுடன் மற்றையோரும் உடனிருந்தனர் என்பதும், சிறிய பருவமதில் என்றதால், பிள்ளைப் பருவத்தில் என்பதும், தில்லைத் தலத்திடையே திரைதூக்கத் தரிசித்தபோது என்றதால், தரிசிக்கப் பெற்றது சிதம்பர ரகசியமே என்பதும் தெளிவாகப் பெறப்படும். வள்ளற்பெருமான் ஐந்து திங்கட் குழவிப் பருவத்தில் முதன் முதலாகத் தரிசித்த தலம் தில்லைச் சிதம்பரம். ஒன்பதாம் ஆண்டளவில் முதன் முதலிற் பாடிய தலம் சென்னை கந்தகோட்டம். சிதம்பர தரிசனத்தின்போது ஐந்துமாதக் குழந்தைப் பருவம் என்பதைப் பெருமானின் இளைய மாணாக்கர் சமரச பஜனை ச.மு.கந்தசாமிபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

வள்ளற்பெருமான் ஓராண்டுக் குழந்தைப் பருவத்தில் பூர்வ ஞான சிதம்பரமாகிய தில்லைச் சிதம்பரத்தில் ஒரு திரைதூக்க, வெளியாகக் கண்ட அனுபவப் பொருளையே நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பின் தம் நாற்பத்தொன்பதாம் அகவையில் உத்தரஞான சிதம்பரமாகிய வடலூரில் தாம் புதிதாகக் கட்டிய சத்திய ஞான சபையில் ஏழுதிரை நீக்கி ஒளியாகக் காட்டியருளினார்.

உலகத்திலுள்ள அனைத்துச் சமயங்களின் முடிபுகளும் தில்லைச் சிதம்பரத்திலே உள்ளது என்று தாயுமானவர் கூறியதை வள்ளலார் அனுபவ பூர்வமாக உறுதி செய்கிறார். இறைவனே தமக்கு அருளியதாகவும் தெரிவித்து உறுதி செய்கிறார்.

## எல்லாரும் இன்புற்றிருக்க அன்பு செய்தல்

**எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே** -221

என்று தாயுமானவர் பாடுகின்றார். ஆனந்தவிகடன் இதழ் இதனைத் தன் குறிக்கோள் மொழியாகக் கொண்டது.

எல்லாரும் இன்புற்றிருப்பதற்கு என்ன செய்யவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு செய்ய வேண்டும். எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணி ஒழுக வேண்டும்.

**அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்கவந்த**

**இன்பப்பெருக்கே இறையே பராபரமே -14**

என்பது தாயுமானவரின் பராபரக் கண்ணி. அன்பைப் பெருக்குவது ஆருயிரைக் காக்கும் வழி. அன்பைப் பெருக்கினால் ஆருயிரைக் காக்கலாம். இறையின்பம் பெருகும் என்பது இக்கண்ணியால் அறியப் பெறும் உண்மையாகும்.

**என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து**
**அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே -21**

அன்பால் என்பு (எலும்பு)ம் உருக வேண்டும். நெஞ்சம் இளக வேண்டும். இளகிக் கரைய வேண்டும். கரைந்து கரைந்து நாமே அன்புருவாய் நிற்க வேண்டும். அப்படி நின்றால் நாம் மட்டுமல்ல, எல்லாரும் இன்புற்றிருக்கலாம்.

எல்லா உயிர்களையும் தம் உயிரைப்போல் எண்ணி இரக்கங் கொள்ள வேண்டும். கருணை கொள்ள வேண்டும்.

**எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே -65**

**தம் உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்ணருள் கூர்**
**செம்மையருக் கேவல் என்று செய்வேன் பராபரமே -149**

பராபரக் கண்ணியைத் தவிர எந்நாட்கண்ணியிலும் இப்படி ஒரு கண்ணி உண்டு.

**எவ்உயிரும் தம் உயிர்போல் எண்ணும் தபோதனர்கள்**
**செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பது எந்நாளோ -12**

தாயுமானவரின் இக்கண்ணிகளோடு, வள்ளற்பெருமானின் எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம் உயிர்போல் என்னும் பாடலை ஒப்பிட்டு உணரவேண்டும்.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர்அவர் உளந்தான்சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்என நான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ -5297**

**அன்பர் பணி செய்ய எனை ஆள் ஆக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே -155**

எல்லாரும் இன்புற்றிருக்க என்னும் கண்ணியைப் போன்று இதுவும் பலராலும் எடுத்துக் கூறப்படும் கண்ணி. அன்பர் பணி செய்தால் இன்பநிலை தானே வந்து எய்தும். எவ்வுயிர்க்கும் எல்லாருக்கும் தொண்டு செய்தால் பேரின்ப நிலை தானே வந்து எய்தும். “தொண்டரொடு கூட்டு கண்டாய்” என்று சுகவாரி ஏழாம் பாடலிலும் வேண்டினார்.

## <u>கொல்லா விரதம்</u>

எல்லா விரதங்களிலும் கொல்லா விரதமே மிகச் சிறந்த விரதம். கொல்லா விரதம் உலகம் முழுவதும் பரவி ஓங்க வேண்டும் என்று தாயுமானவர் விரும்புகிறார்.

**கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க**
**எல்லார்க்கும் சொல்லுவது என்இச்சை பராபரமே -54**

கொல்லா விரதத்தைக் கொண்டவர்களே நல்லோர்கள், மற்றவர்களெல்லாம் யாரோ தெரியவில்லை என்று பாடுகிறார்.

**கொல்லா விரதமது கொண்டவரே நல்லோர் மற்று**
**அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே -192**

கொல்லா விரதத்தைக் கொண்டவர்களே நல்லோர் என்று சொல்பவர், மற்றவர்கள் யாரோ அறியேன், யாரென்றே தெரியவில்லை என்று சொல்லிவிட்டார். கொல்லா விரதம் இல்லாதாரைச் சொல்லவும் கூசுகிறார் தாயுமானவர்.

கொல்லாமை ஏனைய பல குணக்கோடுகளையும் நீக்கவல்லது என்பதனை “கொல்லாமை எத்தனை குணக்கோட்டை நீக்கும்” என்று கூறுகிறார் (ஆனந்த மானபாவம் -1).

கொல்லா விரதத்தைக் கூறும் தாயுமானவரின் கண்ணிகளோடு,

**“கொல்லா விரதமது கொள்ளாரைக் காணில் ஒரு**
**புல்லாக எண்ணிப் புறம்பொழிக - எல்லாமும்” -650**

என்னும் வள்ளற்பெருமானின் நெஞ்சறிவுத்தல் கண்ணியையும்

“கொல்லாமை விரதமெனக் கொண்டார் தம்மைத் தள்ளானை, கொலை புலையைத் தள்ளாதாரைத் தழுவானை”

என்ற திருவருட்பா (3936) அடிகளும் இணைத்துக் காணத்தக்கன.

**கொல்லாநெறியே குருவருள் நெறிஎனப்**
**பல்கால் எனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே**

Saint Ramalingam

என்னும் திருவருட்பா வரிகளும் தாயுமானவரை நினைவூட்டுகின்றன.

உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர் அவர் புற இனத்தார் என்கிறார் வள்ளலார்.

**உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்**
**உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்**
**பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக**
**பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே**
**நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்**
**நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே**
**மயப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்**
**மாநடத்தென் அரசேஎன் மாலை அணிந் தருளே -4160**

சமயம் ஒன்று, சாதி ஒன்று, குலம் ஒன்று, கோத்திரம் ஒன்று; எல்லாரும் ஓர் குலம் (மனித குலம்) எல்லா உயிர்களும் ஒரு குலம் (உயிர்க்குலம்) என்று ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வற்புறுத்திய வள்ளற்பெருமான் புலால் உண்ணும் பழக்கம் ஒன்றனையே வைத்து மனித குலத்தை அகவினம் புறஇனம் என இரண்டு இனங்களாகப் பிரித்தார். புலால் உண்போர் புற இனத்தார். புலால் மறுத்தோர் சைவ உணவினர் அக இனத்தார் என்று குறிப்பிட்டார். தாயுமானவரோ புலால் மறுத்தவர்கள் நல்லோர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, மற்றையோர் யாரோ அறியேன் பராபரமே என்று முடித்துவிட்டார். புலால் உண்பவர்கள் இன்னார் என்று சொல்லக் கூடத் தாயுமானவருக்கு மனம் எழவில்லை. கொல்லா விரதத்தில், புலால் மறுத்தலில் தாயுமானவரும் வள்ளலாரும் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள்.

**<u>சும்மா இருக்கும் சுகம்</u>**

கந்துக மதக்கரியை வசமாநடத்தலாம் - கட்டுத்தறியை முறிக்கும் மதயானையை அடக்கி நம் வசமாக்கி நடத்தலாம் -

கரடி வெம்புலி வாயையும் கட்டலாம் - கரடி, புலி முதலிய கொடிய விலங்குகளின் வாயையும் கட்டி விடலாம்.

ஒரு சிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம் - ஒரு சிங்கத்தின் முதுகின்மேல் ஏறிச் சவாரி செய்யலாம் -

கட்செவி எடுத்து ஆட்டலாம் - பாம்பைப் பிடித்து ஆட்டி வைக்கலாம் -

வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்று உண்ணலாம் - சூடுமிகுந்த நெருப்பில் பாதரசத்தை வைத்துப் பஞ்ச லோகத்தையும் (ஐந்து உலோகங்களையும்) வேதித்து (ரசவாதம் செய்து) விற்று அப்பொருளைக் கொண்டு உணவு கொள்ளலாம்.

வேறு ஒருவர் காணாமல் உலகத்து உலாவரலாம். வேறு யார் ஒருவர் கண்களுக்கும் தெரியாமல் உலகத்தைச் சுற்றி வரலாம்.

விண்ணவரை ஏவல் கொளலாம். தேவர்களை ஏவற்பணி செய்ய வைக்கலாம்.

சந்ததமும் இளமையோடு இருக்கலாம். எக்காலத்திலும் இளமையோடு இருக்கலாம்.

மற்று ஒரு சரீரத்தினும் புகுதலாம். வேறு ஒரு உடம்பில் புகுவதாகிய பரகாயப் பிரவேச சித்தியையும் பெறலாம்.

ஜலம் மேல் நடக்கலாம். நீர்ப்பரப்பின் மேல் நடக்கலாம்.

கனல்மேல் இருக்கலாம். நெருப்பின் மேல் அமர்ந்திருக்கலாம். தன் நிகரில் சித்தி பெறலாம். தன்னிகரற்ற சித்திகளை எல்லாம் பெறலாம்.

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது. மனத்தை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் அரியது.

**கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்**
**கரடிவெம் புலிவாயையுங்**
**கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்**
**கட்செவி யெடுத்தாட்டலாம்**
**வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்**
**வேதித்து விற்றுண்ணலாம்**
**வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்**
**விண்ணவரை ஏவல்கொளலாம்**
**சந்ததமும் இளமையொ டிருக்கலா மற்றொரு**
**சரீரத்தி னும்புகுதலாஞ்**
**சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்**
**தன்னிகரில் சித்திபெறலாஞ்**
**சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற**
**திறமரிது சத்தாகியென்**
**சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே**
**தேசோ மயானந்தமே**

என்று தாயுமானவர் பாடுகின்றார்.

தாயுமானவரின் குரு மௌனகுரு. அவர் திருமூலர் மரபில் வருபவர். "மந்த்ர குருவே, யோக தந்த்ர குருவே மூலன் மரபில் வருமௌன குருவே" என்று அவரைத் தாயுமானவர் பாடுகின்றார்.

மௌனம் என்பது வாய் பேசாதிருக்கும் நிலை என்றே பெரும்பாலோர் பெரும்பாலும் கருதுகின்றனர். வாய் பேசாதிருத்தல் மட்டுமே மௌனமன்று. மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றாலும் மௌனமாக இருத்தலே முழுமையான மௌனம். மனம் அசையாது அடங்கி இருத்தல். நாக்கு அசையாது வாய் பேசாதிருத்தல், உடல் அசையாது ஆடாது இருத்தல், மனோ மௌனம், வாக்கு மௌனம், காஷ்ட மௌனம் என இவற்றைக் கூறுவர். “சத்த மவுன முதல் மூன்று மௌனமும் தான் படைத்தேன்” என்று தாயுமானாரே கூறுகின்றார். (27 பாயப்புலி 26). வாயால் மௌனம் இருப்பது எளிது. உடம்பால் மௌனம் இருப்பது அதைவிட அரிது. மனத்தால் மௌனம் இருப்பது எல்லாவற்றையும்விட அரிது. சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது என்று இதனையே தாயுமானவர் அரிதாகக் கூறினார். மோனம் என்பது ஞானவரம்பு என்றொரு பழமொழி உண்டு. இங்கு மோனம் என்பது மனம் அடங்கியிருத்தலே. மனம் அடங்கியிருக்கும் நிலையே சும்மா இருக்கும் நிலை.

சும்மா இருக்கும் நிலை, தாயுமானவர் பாடலில் பல இடங்களில் கூறப் பெறுகிறது. ஏறத்தாழ இருபத்தைந்து இடத்திற்கு மேல் இருக்கலாம். சில இடங்களை மட்டுமே இங்கெடுத்துக் காட்டுவோம்.

**சும்மா இருக்கச் சுகம் சுகம்**
**என்று கருதி எல்லாம்**
**அம்மா நிரந்தரம் சொல்லவும்**
**கேட்டும்............ -பாயப்புலி - 27**

**ஏதுக்குச் சும்மா இருமனமே! என்றுனக்குப்**
**போதித்த உண்மை எங்கே போகவிட்டாய்? -உடல் பொய்யுறவு-5**
**எதுக்கும் சும்மா இருநீ என்றுரைத்த**
**சூதுக்கோ......... -உடல்பொய்யுறவு -79**

**சும்மா இருத்திச் சுகம் கொடுத்த மோன!**
**-உடல் பொய்யுறவு -80**

**சும்மாவே இருக்க வைத்தாய் -கல்லாலின் -26**

இப்படி இன்றும் எத்தனையோ இடங்களை எடுத்துக் காட்டலாம். தாயுமானவருக்கு முன்னே அருணகிரிநாதர் சும்மா இருப்பதைப் பற்றி நிரம்பச் சொல்லியுள்ளார்.

**சும்மா இருசொல்லற என்றலுமே**
**அம்மா பொருளொன்றும் அறிந்திலனே**

என்னும் கந்தரனுபூதிச் செய்யுள் பலராலும் எடுத்துக் காட்டப் பெறுவது. கண்ணுடைய வள்ளலாரும் ஒழிவிலொடுக்கத்தில் சும்மா இருப்பதைக் கூறியுள்ளார். சும்மா இருப்பதைப் பற்றி ஞானிகள் பலரும் சொல்லியுள்ளனவற்றையெல்லாம் தொகுத்தால் அது ஒரு மிகப் பெரிய ஆய்வாகப் பெருகும்.

வள்ளற்பெருமானது திருவருட்பாவில் சும்மா இருக்கும் சுகம் என்று வருமிடத்தை மட்டும் எடுத்துக் காட்டி இப்பகுதியை நிறைவு செய்வோம்.

**இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்**
**றென்றுவரு மோஅறியேன் எங்கோவே - துன்றுமல**
**வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து**
**சும்மா இருக்கும் சுகம்** **-1959**

திருவருட்பா மூன்றாம் திருமுறையில் திருவடிப் புகழ்ச்சிக்குக் காப்புச் செய்யுளாக அமைந்துள்ளது சும்மா இருக்கும் சுகம் என்னும் இவ்வெண்பா. சன்மார்க்க உலகில் பரவலாகப் பலராலும் நன்கறியப் பெற்ற பாடல். சும்மா இருக்கும் சுகத்திற்கு வள்ளலாரின் இப்பாடல் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. தாயுமானவரும் வள்ளலாரும் சும்மா இருக்கும் சுகத்தைப் பெற்றவர்கள், அனுபவித்தவர்கள், நமக்கும் கூறியருளியவர்கள்.

## அடியாரும் ஆண்டவனும்

### உடல் பொருள் ஆவிகளை மாற்றிக்கொள்ளல்

நம்முடைய உடல் பொருள் ஆவி, மூன்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டு, இறைவனது உடல் பொருள் ஆவி மூன்றையும் நாம் பெறுதல் என்பது மிகப்பெரிய ஒரு ஞான அனுபவநிலை. இந்நிலையைத் திருமூலர், திருமந்திரத்தில் மிக அழகாகக் கூறுகிறார். திருமூலரும் வள்ளலாரும் என்ற நூலில் நாம் இதனை ஓரளவு நன்கு விளக்கியுள்ளோம்.

தாயுமானவரும் இதைப் பற்றிக் கூறுகிறார். வள்ளற்பெருமான் ஏனைய எல்லாரையும்விடத் தெளிவாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறுகிறார். தாயுமானவர் கூறுவதைக் காண்போம்.

**“எக்காலமும் தனக்கு ஒருசெயல் இலா**
**ஏழைநீ என்று இருந்திட்டு**
**எனது ஆவி உடல் பொருளும் மௌனியாய் வந்துகை**
**ஏற்று, நமது என்ற அன்றே,”**

**-8 ஆனந்தமான பரம் -10**

**“வந்து என் உடல் பொருள் ஆவி மூன்றும் தன்கை**
**வசம் எனவே”**

**-14 ஆகாரபுவனம் சிதம்பர ரகசியம் -18**

**“எனக்கு என்று இருந்த உடல் பொருளும்**

யானும் நினஎன்று ஈந்த வண்ணம்"

-23. தன்னை ஒருவர் 10

"எனக்கு எனச் செயல் வேறு இல்லை
யாவும் இங்கு ஒருநின்
தனக்கு எனத் தகும்; உடல் பொருள்
ஆவியும் தந்தேன்"

-25. எனக்கு எனச் செயல் 1

"எடுத்த தேகம் பொருள் ஆவி மூன்றும்நீ
எனக்கு ஒன்று இல்லை என, மோன நன்னெறி
கொடுத்தபோது கொடுத்தது அன்றோ?"

-31. எடுத்த தேகம் 1

உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்கிறேன் என்று உலகியலில் பலர் கூறக் கேட்கிறோம். ஆனால் யாரும் செய்யக் கண்டோம் இல்லை. தாயுமானவரும் வள்ளலாரும் தம் உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் இறைவனுக்குத் தத்தம் செய்து கொடுத்தனர்.

வள்ளலாரும் இறைவனும் உடல் பொருள் ஆவிகளை மாற்றிக் கொண்டதைக் குறிக்கும் திருவருட்பாப் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே. -3802

என்னுடைய உடல் பொருள் ஆவிகளை நீ எடுத்துக்கொண்டு உன்னுடைய உடல் பொருள் ஆவிகளை எனக்குக் கொடு என்று வள்ளலார் வேண்டும் பாடல் இது. இவ்வேண்டுகோளை ஏற்று இறைவன் வள்ளலாருடைய உடல்பொருள் ஆவிகளைத் தான் எடுத்துக்கொண்டு, தன்னுடைய உடல்பொருள் ஆவிகளை வள்ளலாருக்குத் தந்தான். அவ்வாறு மாற்றிக் கொண்டதைக் கூறும் பாடல்கள் பின்வருவன.

என்உயிரும் என்உடலும் என்பொருளும் யானே
இசைந்துகொடுத் திடவாங்கி இட்டதன்பின் மகிழ்ந்தே
தன்உயிரும் தன்உடலும் தன்பொருளும் எனக்கே

தந்துகலந் தெனைப்புணர்ந்த தனித்தபெருஞ் சுடரே

மன்உயிருக் குயிராகி இன்பமுமாய் நிறைந்த
மணியேஎன் கண்ணேஎன் வாழ்முதலே மருந்தே
மின்னியபொன் மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யும் அணிந் தருள்வோய்என் பொய்யும் அணிந் தருளே

என்னையும்என் பொருளையும்என் ஆவியையும்
தான்கொண்டிலங் கென்பால் அன்பால்
தன்னையும்தன் பொருளையும்தன் ஆவியையும்
களித்தளித்த தலைவன் தன்னை
முன்னையும்பின் னையும்எனக்கே முழுத்துணையாய்
இருந்தமுழு முதல்வன் தன்னை
அன்னைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

என்உடலும் என்பொருளும் என்உயிரும் தான்கொண்டான்
தன்உடலும் தன்பொருளும் தன்உயிரும் - என்னிடத்தே
தந்தான் அருட்சிற் சபையப்பா என்றழைத்தேன்
வந்தான்வந் தான்உள மகிழ்ந்து.

தந்தேகம் எனக்களித்தார் தம்அருளும் பொருளும்
தம்மையும்இங் கெனக்களித்தார் எம்மையினும் பிரியார்
எந்தேகம் அதிற்புகுந்தார் என்உளத்தே இருந்தார்
என்உயிரில் கலந்தநடத் திறையவர்கா லையிலே
வந்தேஇங் கமர்ந்தருள்வர் ஆதலினால் விரைந்தே
மாளிகையை அலங்கரித்து வைத்திடுதி இதற்குச்
சந்தேகம் இல்லைஎன்றன் தனித்தலைவர் வார்த்தை
சத்தியம்சத் தியம்மாதே சத்தியம்சத் தியமே

மேற்பாடல்களில் வள்ளலாரும் இறைவனும் உடல் பொருள் ஆவிகளை மாற்றிக்கொண்ட செய்தி மிகத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. பசுவாகிய சீவனும் பதியாகிய சிவனும் உடலுயிரை இங்ஙனம் மாற்றிக் கொள்ளும் அனுபவ நிலையைப் “பசுகரணம் பதிகரணமான அனுபூதி”, “பசு கரணம் சிவகரணமான அனுபூதி” என்று சாத்திர நூல்களிற் கூறுவர். திருமந்திரம் திருவாசகம் ஆகிய இரண்டிலும் இவை தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. தாயுமானவரும் வள்ளலாரும் கூறுவதை இங்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

<u>தேகசித்தி - மரணமிலாப் பெருவாழ்வு</u>

வள்ளலார் கூறும் தேகசித்தி, மரணமிலாப் பெருவாழ்வு, இவ்வுடம்பு பிணமாக வீழ்ந்து மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகாமல் உடம்போடே சித்தி பெறுவதாகும். சமயநூல்கள் முடிந்த முடிபான வீடு பேற்றை முத்தி எனக் கூறும். வள்ளலார் சித்தி எனக் கூறுவர்.

**"முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்" -249**

**"சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்" -251**

என்பது வள்ளற்பெருமான் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

**புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை**
**அடைவதென் றருளிய அருட்பெருஞ்ஜோதி**

**-247, 248**

என்பதும் அருட்பெருஞ்ஜோதி அகவல்.

**முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய்**
**சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே - 4680**

என்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு உறுதி உரைத்தது. முத்தியும் சித்தியும் பெற்று முயங்கிடுவாய் என ஐந்து முறை சத்தியம் செய்து ஆண்டவர் வள்ளலாருக்கு உறுதி உரைக்கிறார்.

**முத்தியைப் பெற்றேன் அம்முத்தியினால் ஞான**
**சித்தியை உற்றேன் என்று உந்தீபற**
**சித்தனும் ஆனேன் என்று உந்தீபற -4904**

என்பது வள்ளற்பெருமான் அருளிய திருவுந்தியார். எனவே முத்தி - சாதன நிலை என்பதும், சித்தி - சாத்தியநிலை என்பதும் பெறப்படும். சமய அன்பர்கள் குறிப்பாகச் சைவ மெய்யன்பர்கள் இதனை ஏற்றுக் கொள்ளுவது கடினம். யாம் இங்கு வியவகாரம் செய்ய விரும்பவில்லை. எமது நூல்களில் இதனை விரித்து விளக்கியுள்ளோம். ஆதலின் இனிச் சித்தியைப் பற்றிய சிந்தனையின் மேற் செல்வோம்.

உடம்பு பிணமாக விழுந்துவிட்டால் உயிர் பரமுத்தியையோ சித்தியையோ பெறுவதில்லை. உடம்போடே பெறுவதுதான் முத்தியும் சித்தியும். இதனைத் தாயுமானவரும் ஏற்றுக் கொள்ளுகிறார் என்பது

**உலக நெறிபோல் சடலம் ஓய உயிர்முத்தி**
**இலகும் எனல் பந்த இயல்போ பராபரமே -358**

என்னும் பராபரக் கண்ணியால் தெரிய வரும்.

**தேகம் யாதெனும் ஒரு சித்திபெறச் சீவன்முத்தி**
**ஆகுநெறி நல்லநெறி ஐயா பராபரமே -357**

என்பதால், தேகம் ஏதேனும் ஒரு சித்தியைப் பெறுவதே சீவன் முத்தியைப் பெறும் நல்ல நெறி என்பது தாயுமானவர் கருத்தாதல் தெளிவு.

**உருவெளிதான் வாதவூர் உத்தமர்க் கல்லால்**
**குருவழி நின்றார்க்கும் உண்டோ கூறாய் பராபரமே -356**

என்று மாணிக்கவாசகர் உருவெளியாய் முத்திபெற்ற திறத்தைக் கூறுகிறார். இம்மூன்று கண்ணிகளும் தொடர்ச்சியாக ஓரிடத்திலேயே உள்ளன. நாம் இங்கு ஏற்ற பெற்றி மாற்றி எடுத்துக் காட்டியுள்ளோம்.

தேகம் பிணமாக விழுந்துவிடக் கூடாது என்ற கருத்து தாயுமானவருக்கு இருந்திருக்கிறது என்பதற்கு

**தேகம் விழுந்திடில் என்செய்வேன் பராபரமே -24**

**கால்பிடித்து மூலக்கனலை மதிமண்டலத்தின்**
**மேல் எழுப்பின் தேகம் விழுமோ பராபரமே -153**

என்னும் கண்ணிகளை ஆதாரமாகக் கொள்ளலாம்.

சுத்ததேகம் பிரணவதேகம் ஞானதேகம் என மூன்று வகையான தேகசித்திகளை வள்ளலார் கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| **சுத்த தேகம்** | - | **ஒளி உடம்பு (பொன்னுடம்பு, சுவர்ணதேகம்)** |
| **பிரணவதேகம்** | - | **ஒலி உடம்பு பிரணவம் - மந்திரம் - ஒலி** |
| **ஞான தேகம்** | - | **அருள் உடம்பு.** |

தாயுமானவரும் மூவகைத்தேக சித்தியைக் கூறுகிறார்.

**முத்தியிலும் தேகமிசை மூவிதமாம் சித்திபெற்றோர்**
**எத்தனைபேர் என்றுரைப்ப தெந்தாய் பராபரமே -209**

மூவிதமாம் சித்தி என்பது அருவ சித்தி உருவ சித்தி அருவுருவ சித்தி எனச் சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர யதீந்திரர் உரை எழுதுகிறார். "மாணிக்கவாசகர் அருவசித்தியினையும், சுந்தரர் உருவ சித்தியினையும் அப்பர் சம்பந்தர் அருவுருவ சித்தியினையும் அடைந்தனர் என்ப" என்றொரு அடிக்குறிப்பு திருப்பனந்தாள் காசிமடத்துப் பதிப்பில் காணப்படுகிறது. பதிப்பாசிரியர் பட்டுசாமி ஓதுவாரின் குறிப்பாகலாம்.

**வெளியாய் அருளில் விரவும் அன்பர் தேகம்**
**ஒளியாய் பிறங்கியதும் உண்டோ பராபரமே-190**

என்பது, ஒளியுடம்பையும் அது வெளியாய் அருளில் விரவுவதையும் கூறுகிறது. ஒளி உடம்பு, வெளியாய் அருளில் விரவுவது ஆகியவை வள்ளலார் கூறுவதை ஒத்துள்ளன.

சமயகுரவர் நால்வரும் உடம்போடு முத்தி பெற்றவர்களே. அவர்களது உடம்புகள் மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகவில்லை. அவர்களுக்குப் பூமியில் சமாதி இல்லை. திருஞானசம்பந்தரின் உடம்பு சோதியிற் கலந்தது. திருநாவுக்கரசரின் உடம்பு சிவலிங்கத்தில் ஐக்கியமாயிற்று. சுந்தரர் உடம்போடே (கூண்டோடே) கயிலாயம் சென்றார். மாணிக்கவாசகர் தில்லைச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானோடு ஐக்கியமானார். பட்டினத்தார் திருவொற்றியூர்க் கடற்கரையில் தமது உடம்பையே லிங்கமாக ஆக்கிக் கொண்டார்.

**சத்தாகி நின்றோர் சடங்கள் லிங்கமென**
**வைத்தாரும் உண்டோ என்வாழ்வே பராபரமே -244**

என்னும் தாயுமானவரின் பராபரக்கண்ணி பட்டினத்தார் தமது உடம்பை லிங்கமாக ஆக்கிக் கொண்டதையே கூறுகிறது எனலாம்.

வள்ளலார் கூறும் ஞானதேகம் கர்ப்பூரம்போற் கரைந்து விடும்.

**சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்**
**வைத்த கர்ப்பூரம் போல் வயங்கும் பராபரமே -245**

என்பது கர்ப்பூர தேகசித்தியைக் குறிப்பதாகும்.

**எழுகின்ற தீயில் கர்ப்பூரத்தை ஒக்கப்**
**பொழிகின்ற இவ்வுடல் போம்அப் பரத்தே -2587**

என்னும் திருமூலர் திருமந்திரமும், மேற்காட்டிய தாயுமானவர் பராபரக் கண்ணியும் ஒத்திருக்கின்றன. இரண்டுமே கர்ப்பூர தேகசித்தியைக் கூறுகின்றன. இக்கர்ப்பூர தேக சித்தி சமண சமயத்திலும் கூறப்பெற்றுள்ளது.

இவ்வுடலம் இறவாதிருக்க வேண்டும், கற்பூர தீபம் போல் கரைய வேண்டும் என்று கூறும் ஒரு முழுப்பாடலே தாயுமான்வரில் உள்ளது.

**இன்னம் பிறப்பதற்கு இடம்என்னின் இவ்வுடலம்**
**இறவாதிருப்ப மூலத்து**
**எழும் அங்கி அமிர்து ஒழுகும் மதிமண்டலத்தில் உற**
**என் அம்மை குண்டலினிபால்**

**பின்னம் பிறக்காது சேய்என வளர்த்திடப்**
**பேயேனை நல்க வேண்டும்**
**பிறவாதநெறி எனக்கு உண்டுஎன்னின் இம்மையே**
**பேசு கற்பூர தீபம்**

**மின்னும் படிக்கு அகண்டாகார அன்னைபால்**
**வினையேனை ஒப்புவித்து**
**வீட்டுநெறி காட்டி டுதல் மிகவும் நன்று, இவைஅன்றி**
**விவகாரம் உண்டு என்னிலோ**

**தன்னந் தனிச்சிறியேன் ஆற்றிலேன் போற்றவளர்**
**சன்மார்க்க முத்தி முதலே**
**சர்வபரிபூரண அகண்ட தத்துவம்ஆன**
**சச்சிதானந்த சிவமே**

இப்பாடலில், 'இன்னும் பிறப்பதற்கு இடம் என்னின்', 'பிறவாத நெறி எனக்கு உண்டு என்னின்', 'இவ்வுடலம் இறவாதிருப்ப', 'கற்பூர தீபம் மின்னும்படிக்கு' என்றெல்லாம் இறவா நிலை, தேகசித்தித் திறம் கூறப்பெற்றுள்ளதைக் கூர்ந்து நோக்குக.

தேகசித்தி சம்பந்தமான கருத்துகளில், தாயுமானவர் கருத்தும் வள்ளலார் கருத்தும் ஒத்திருப்பதை இங்கே ஓரளவு எடுத்துக் காட்டியுள்ளோம்.

இராமலிங்க அடிகள் வரலாறு, வள்ளலார் மறைந்தது எப்படி (சாகாக்கலை ஆராய்ச்சி) என்னும் எமது நூல்களின் இன்னும் சிறிது விரிவாக தேகசித்தி சம்பந்தமானவற்றை விளக்கியுள்ளோம். விரும்புவோர் அவற்றுட் காண்க.

## இருவர் பாடல் சில ஒப்புமைகள்

தாயுமானவர் வள்ளலார் இருவர் பாடல்களிலும் பல இடங்களில் பல்வேறு ஒப்புமைகள் உள்ளன. சில இடங்களில் ஒன்றை ஒன்று படிசெய்தாற் போன்று அப்படியே ஒன்றாக அமைந்துள்ள அருமையைக் காணலாம்.

"பதிஉண்டு நிதி உண்டு" என்று தாயுமானவர் பாடலும் நீர் உண்டு, பொழிகின்ற கார் உண்டு" என்ற வள்ளலார் அருட்பாவும் ஒன்றைப் போன்று ஒன்று அமைந்துள்ள அழகையும் அருமையையும் காணலாம்.

**பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்**

பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிர மணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானஆ னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனும் அகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூ தனன்தங்கையே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே.

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே -திருவருட்பா - 28

கருமுகம் காட்டாமல் என்றும் கர்ப்பூரம் வீசும்
திருமுகமே நோக்கித் திருக்கு அறுப்பது எந்நாளோ -4

Saint Kamalingam

என்பது தாயுமானவரின் எந்நாள் கண்ணி.

**"கற்பூரவாசம் வீசும் பொற்பாந் திருமுகத்தே" -2979**

என்பது வள்ளலார் திருஅருட்பா.

**"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"**

என்கிறார் வள்ளலார். பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனமும் நள்ளேன்" என்கிறார் தாயுமானவர். பூஜைக்குப் பறிக்கும் பூவில் இறைவனைக் காண்கிறார் தாயுமானவர். நீ இப்பூவிலேயும் இருக்கிறாய், நீ இருக்கும் இப்பூவைப் பறித்து உனக்கே பூஜை செய்வது எவ்வாறு பொருந்தும் என்று எண்ணினார். அவ்வாறு சிந்தனை சென்றதால் அப்பூவைப் பறிப்பதற்கு அவருக்கு மனம் வரவில்லை. பார்க்கின்ற மலர் ஊடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனமும் நள்ளேன் என்கிறார். பூச்செடிகளிலிருந்து ஏராளமான பூக்களைப் பறித்து விதம் விதமான மாலைகளையும் கண்ணிகளையும் தொடுத்துச் சாத்திப் பூஜை செய்வதில் வள்ளலாருக்கும் ஈடுபாடில்லை. அர்ச்சனை அபிடேகம் முதலிய சடங்கு வழிபாடுகளை வள்ளலார் கூறவில்லை. கள்ளமற்ற உள்ளத்தால் செய்யப்பெறும் ஞான வழிபாட்டையே வள்ளலார் தாயுமானவர் இருவரும் கூறுகின்றனர்.

அன்பு அபிஷேக நீர், என ஆவி நைவேத்தியம், பிராணனும் மதியும் தூப தீபங்கள். இது ஒரு கால பூஜையன்று, சதாகால பூஜையா ஒப்புவித்தேன் என்கிறார் தாயுமானவர் (கருணாகரக் கடவுள் -8).

**<u>வள்ளலார் உபதேசத்தில் தாயுமானவர் பாடல் மேற்கோள்</u>**

வள்ளற்பெருமானது உபதேசங்கள் பலவற்றுள்ளும் மிகப்பெரிய உபதேசம் பேருபதேசம் என்னும் மகோபதேசம் என்றும் வழங்குவது. வடலூரை அடுத்த மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் 22.10.1873. ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்கள் ஏழாம் நாள் புதன்கிழமை பகல் எட்டுமணிக்கு முதன் முதலாகச் சன்மார்க்கக் கொடி கட்டியபோது செய்யப் பெற்றது. வள்ளற்பெருமானது முடிந்த முடிபான பல கருத்துகள் இவ்வுபதேசத்தில்தான் கூறப்பெறுகின்றன. அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரம் இவ்வுபதேசத்தில்தான் வள்ளற்பெருமானால் முதன் முதலில் எடுத்து வழங்கப்பெறுகிறது. இப்பேருபதேசத்தில் வள்ளற்பெருமான் "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத்தால் உணர்க என்று தாயுமானவர் பாடலை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்.

**<u>தாயுமான சுவாமிகள் பாடல்</u>**

**சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது**
**தான்வந்து முற்றுமெனலால்**
**சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது**

சதாநிட்டர் நினைவதில்லை
சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலரோ
இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
இருக்காதி வேதமுனிவர்
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள் 1
இரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்க ளியாவருங்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே -7

வள்ளற்பெருமானால் பிரமாணமாக எடுத்துக் காட்டப் பெற்ற சிறப்புடையது மேற்கண்ட தாயுமானவர் பாடலாகும்.

## <u>தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டு</u>

## <u>என்று வள்ளலார் கூறியுள்ளது</u>

வள்ளற்பெருமானது உபதேசக் குறிப்பு ஒன்றில் தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டு என்று கூறப்பெற்றுள்ளது. அவ்வுபதேசக் குறிப்பு வருமாறு:

சமய மத சன்மார்க்கங்களில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அநேக பெரியோர்களும் சுத்தப் பரப் பிரம்மத்தினிடத்தில் இரண்டறக் கலந்து விட்டதாக முறையிடுவது வாஸ்தவமா அவாஸ்தவமா வென்றால், அவாஸ்தவம். சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமய மத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப் படிகளாதலால், அவற்றில் ஐக்கியமென்பதே யில்லை. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்தியதேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்த சன்மார்க்கம் வழங்கும்போது இவர்கள் யாவரும் உயிர் பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும்

விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.

-உபதேசப் பகுதி ப.91

தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டு என்பது வள்ளற்பெருமானது இவ்வுபதேசக் குறிப்பால் தெளிவாக அறியப்பெறும்.

## வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரா?

வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார்.

**தண்டமிழ் வடலூரான்முன்**
**தாயுமானவனே என்றும்**
**அண்டநீர் மலர் கொண்டுற்ற அஞ்சுகம்**
**அடியேன் என்றும்**
**விண்டதே வொருவனுள்ளான்**
**வெறும் பொயான் விளம்பிலேன் மெய்த்**
**தொண்டர் தாள்துகளும் மாயாச்**
**சூரியா தியரும் சான்றே**

என்பது தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்தில் கண்கண்ட புலவர் சருக்கத்தில் 21-ஆம் பாடல். வேறு இரு பாடல்களிலும் வண்ணச்சரபர் இதனைக் கூறுகிறார்.

**வடலூரான் முன் தாயுமானவனே என்னும்**
**திடமாற்றமே போல்சிலர் வந் - திடலோதிக்**
**கொன்றான் எழுப்பிக் கொடுக்கும் திருநாளே**
**நன்றாம் அவற்றில் மிக்க நாள்.**

**அருமைத் தமிழ்த் தாயுமான பிள்ளைதாமே**
**பெருமை இராமலிங்க பிள்ளை - பொருவிலதாக்**
**கூறும் உரையாற் குலவுநச்சி னார்க்கினியர்**
**ஆறுமுக நாவலர்**

வள்ளற்பெருமான் முற்பிறவியில் தாயுமானவர் என்றும், தாம் முற்பிறப்பில் அருணகிரிநாதர் என்றும், ஆறுமுகநாவலர் முற்பிறப்பில் நச்சினார்க்கினியர் என்றும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார்.

தண்டபாணி சுவாமிகள் கூறியுள்ளன எல்லாவற்றையுமே ஏற்றுக்கொள்ள இயலாது. தண்டபாணி சுவாமிகள் முற்பிறப்பில் அருணகிரிநாதரே என்பதையும்

அருணகிரிநாதருக்கு மறுபிறவி உண்டென்பதையும் உலகம் ஏற்காது. நச்சினார்க்கினியாருக்கு மறுபிறவி உண்டு எனினும் ஆறுமுக நாவலர் முற்பிறப்பில் நச்சினார்க்கினியர் என்பதை உபசாரமாகவே கொள்ள வேண்டும். அதைப் பற்றி இவ்விடத்தில் விவரிக்க வேண்டா என விட்டு விடுவோம்.

தண்டபாணி சுவாமிகள் வள்ளற்பெருமானை மூன்று முறை கண்டு அளவளாவியுள்ளார். அப்போது வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்று வள்ளலாரிடமே கூறியுள்ளார். இதனைக் கேட்ட வள்ளற்பெருமான் முதலில் எதுவும் கூறாது வாளாவிருந்தார். மீண்டும் வண்ணச்சரபர் அழுத்தமாகக் கூறவே வள்ளற்பெருமான் உம் ‘இருக்கலாம்’ என்று கூறி அமைந்தார்.

வள்ளற்பெருமானது உபதேசக் குறிப்பால் தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டென்பது உறுதியாகிறது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறுவது போன்று வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவரே என்பதையும் ஏற்கலாம்.

தாயுமானவர் விட்ட இடத்தில் வள்ளலார் தொட்டுத் தொடங்குவது போலக் காணப்படுகிறது. தாயுமானவர் பாடல்களின் தொடர்ச்சி போலத் திருவருட்பா காணப்படுகிறது. தாயுமானவர் வள்ளலார் இவ்விருவருடைய அருளிச் செயல்களையும் அனுபவங்களையும் நுட்பமாக ஆராய்ந்தால், தாயுமானவரே வள்ளலாராகப் பிறந்திருக்கலாம் என்று எண்ண இடமேற்படுகிறது.

தாயுமானவருக்கு மறுபிறப்பு உண்டென்று வள்ளலார் கூறுவதும், முற்பிறப்பில் தாயுமானவரே என்று கூறக்கேட்ட பெருமான் ‘இருக்கலாம்’ என்று சொன்னதும் அவ்வெண்ணத்தை வலுப்படுத்துகின்றன. வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவராக இருக்கலாம் என்ற எண்ணமும் நம்பிக்கையும் தண்டபாணி சுவாமிகளின் கூற்றை அறிவதற்கு முன்னமே எமக்கு உண்டு. தண்டபாணி சுவாமிகள் கூற்றும் அதனை வலுப்படுத்துவதாயிற்று.

வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவர் என்பது உண்மை. தாயுமானவர் மறுபிறப்பில் வள்ளலாராகப் பிறந்தார் என்பதால் தாயுமானவருக்குப் பெருமையே தவிரச் சிறுமையொன்றும் இல்லை. வள்ளலார் முற்பிறப்பில் தாயுமானவர் என்பதால் வள்ளலாருக்கு ஏற்படும் தனிப் பெருமையொன்றும் இல்லை. எல்லாம் திருவருள் வண்ணம்.

**வாழ்க தாயுமான இராமலிங்கம்!**

**வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!**

## பிற்சேர்க்கை 1

### தாயுமானவர் பாடல்

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
        ஆலமு தாகவிலையோ
அக்கடலின் மீதுவட வனல்நிற்க வில்லையோ
        அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ மேருவுந்
        தனுவாக வளையவிலையோ
சத்தமே கங்களும் வச்ர தர னாணையிற்
        சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
        மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
        மார்க்கத்தில் வைக்கவிலையோ
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
        பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
        பரிபூர ணானந்தமே
ஆசைக்கொ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
        ஆளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
        அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
        நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
        நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
        உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
        ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
        பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
        பரிபூர ணானந்தமே.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
        நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
        சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி

மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியிவிட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்
டிடருற உறுக்கியிடர் தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான் எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே

எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதா
னியாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தினின்று
காலூற்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவிதன் அருளினாலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

அரும்பொனே மணியேயென் அன்பேயென் அன்பான
அறிவேயென் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடிநாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்

மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என் கண்ணே அரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவியாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்கேளே.

வட்ட மிட்டொளிர்பி ராண வாயுவென
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெ னும்பெரிய மத்த யானையைஎன்
வசம டக்கிடின்மும் மண்டலத்
திட்ட முற்றவள ராச யோக மிவன்
யோக மென்றறிஞர் புகழவே
ஏழை யேனுலகில் நீடு வாழ்வனினி
இங்கி தற்குமனு மானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுக யோகமும்
பார காவிய கவித்ய நான்மறை
பராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியுந லன்ப ருக்கருள
விருது கட்டியபொன் அன்னமே
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகியென் அம்மையே.

## பிற்சேர்க்கை - 2

### திருவருட்பா

திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் ளமைந்தபேர் ஒளியே
அன்புரு வாம்பர சிவமே

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்கும்நிறை தெய்வம்
என்னுயிரில் கலந்தெனக்கே இன்பநல்கும் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையில் ஆடுகின்ற நடராசத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வம்அருட் பூரணமாந் தெய்வம்

செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடிஎன் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகி கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வம்முற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக எனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் ஆடுகின்ற தெய்வமதே தெய்வம்.

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வம் அரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியைஓர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை ஆண்டதெய்வம் அருட்சோதித் தெய்வம்
ஆகமவே தாதிஎலாம் அறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருள் அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்அறிவே என்உயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள்அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்

தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந் தருளே.


பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள்உணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனித்தநறுங் கனியே
மெய்ம்மைஅறி வானந்தம் விளக்கும்அருள் அமுதே
தீர்த்தாஎன் றன்பர்எலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும்அணிந் தருளே.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினங்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகம்எலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளல்உனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை உறல்வேண்டும் எனைஅடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்

பொருளாம்ஓர் திருவடிவில் உடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்வேண் டுவனே



வட்டவான் சுடரே வளர்ஒளி விளக்கே
வயங்குசிற் சோதியே அடியேன்
இட்டமே இட்டத் தியைந்துளே கலந்த
இன்பமே என்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த
கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரருள் அரசே
நம்பினேன் கைவிடேல் எனையே.

புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும்நின் தனையே
கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

வாணாள் அடைவர் வறுமை யுறார்நன் மனைமக்கள் பொன்
பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்
காணார்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே.

பொய்யாத மொழியும்மயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதள் ராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்நினை
என்றும்மற வாத நெறியும்
இறவாத தகவும்மேற் பிறவாத கதியும்இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐயான னம்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சார சாரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

சூரிட்ட நடையில்என் போரிட்ட மனதைநான்
சொல்லிட்ட முடன்அ ணைத்துத்
துன்றிட்ட மோனம்எனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி என்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மஒர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்
கறங்கெ னச்சுழல் கின்றதே
தாரிட்ட நீஅருள் சீரிட்டி டாய்எனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
தமிய னேன்என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

மாயைஎனும் இரவில்என் மனையகத் தேவிடய
வாதனைஎ னுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையை எழுப்பிஅவ னைத்தம
வசமாக உளவு கண்டு
மேயமதி எனும்ஒரு விளக்கினை அவித்தெனது
மெய்ந்நிலைச் சாளிகை எலாம்
வேறுற உடைத்துள்ள பொருள்எலாம் கொள்கை கொள
மிகநடுக் குற்று நினையே
நேயம் உற ஒவாது கூவுகின் றேன்சற்றும்
நின்செவிக் கேற இலையோ
நீதிஇலை யோதரும நெறியும்இலை யோஅருளின்
நிறைவும் இலை யோஎன் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்
நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே

மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலை அணிந் தருளே.

வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில்
அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றிஅருட் செயல்ஒன்றும் செயத்துணியேல் என்றே
இன்புறஎன் தனக்கிசைத்த என்குருவே எனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயேஎன் இறையே
துன்பறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே.

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்திடும்ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது
படியில்அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்
பயந்தீர்த்து விடுகஎனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே
நின்மலரே என்கின்றோர் எல்லாரும் காண
அடியும்உயர் முடியும்எனக் களித்தபெரும் பொருளே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்

எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
        எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
        வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
        பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
        பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
        எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
        தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
        யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
        இடம்என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
        சிந்தைமிக விழைந்த தாலோ.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தயவு